

**HIS MAJESTY SHAH MOHAMMED ALI**
**(OF FERSIA.)**

**மாட்சிமை தங்கிய**
**சாஹ் முகம்மது அலி**

முஸ்லிம் பாதுகாவலன்,

THE "MUSLIM GUARDIAN."

புத்தகம் 6.] வைகாசி, 1907. [இலக்கம் 3.

Vol. 6.] MAY, 1907. [No. 3.

## Note by the Editor.

:o:

**Lord Cromer.** NOW THAT Lord Cromer has resigned his post in Egypt we trust the aims of the Egyptian National Party will receive due consideration in England, where they were so long represented to be not strictly legitimate. The Egyptians believe that Egypt is their country, and remember the solemn pledge of England, given in 1886, when the Drummond Wolff mission failed, that she would evacuate Egypt when that country is able to manage its own affairs. The aspiration of the National Party is to have more voice in the administration of their country, and more power in the management of their affairs. The question now asked is whether the Egyptians are not fit to have enhanced political power, or are denied what is legally and morally due to them. They once liked Lord Cromer, and looked to him for assistance towards political emancipation, but have since been disappointed, and have now begun to denounce him. We have heard from persons who have recently returned from Egypt that dissatisfaction with him was widespread there. The cause of Lord Cromer's resignation is said to be ill health, but the following paragraph occurs in Mr. Blunt's pamphlet published last year :—

"Yet, notwithstanding all this, it is clear he must be sacrificed unless the whole virtue of the nation is to vanish with him in a disgraceful smoke. I do not ask that Lord Cromer should be condemned or disgraced or recalled from Egypt without a full hearing. He may yet be able to tell us that, in spite of appearances, he is personally guiltless here, that his better judgment was imposed on by subordinates in Egypt, that he was obeying orders from his diplomatic chiefs

at home, that he made a mistake of which he is ashamed. If he can do this, I shall, for my part, make him all the amends within my power in the way of apology and future praise. But, as things stand, the known facts are too terribly against him for any honest man with public courage not to denounce him, and not to demand that he should be cited to explain, or if explain he will not, then that he should leave to others the task of reparation for his crime, needed by the Egyptians he has wronged."

We hope Lord Cromer's successor will create better feeling between the Egyptians and the English political party in Egypt.

---

# பத்திராதிபர் குறிப்பு.

## முகம்மதிய்யரின் விவாகச் சட்டம்.

தென் மாகாண கவர்னமேர்ந்து. ஏஜன்றும் புறவின்ஷியல் றஜிஸ்திருருமான லஷின்றன் துரை கொழும்பிலுள்ள கனவானும் தனவானுமான சுலைமா லெவ்வை நெயினு மரைக்கார் ஆசியார் அவர்களுக்கு வோர் கடித மெழுதி முகம்மதிய்யரின் விவாகச் சட்டத்தை இலங்கை முஸ்லிம்கள் பிரியமாய் ஏற்றுக்கொள்ளா திருப்பதின் நியாயமென்னவென்று விசாரித்தும், கிழக்கு மாகாணத்தில் கல்முனைக் கயலில் காரியங்களிருக்கின்ற கிர்தையான நிலைபரத்தை அவர்களறிவார்களாயின் அச்சட்டத்தை அவர்களின் மார்க்கத்தவர்களுக்கிடையில் பலபந்தப்படுத்துதற்கு அவர்களா லேன்றியதை யெல்லாஞ் செய்வார்களென்றும், பொய்யான லெவ்வைமார்களெழுதிய கள்ளக் கடுத்தங்களினாலும் பொய்க்கலியாணங்களினாலும் முடிவாக நூற்றுக் கணக்கான வழக்குகள் செலவு கேட்டுக் கல்முனைக்கோட்டில் கொண்டு வரப்பட்டிருக்கின்றனவென்றும், ஓர் முஸ்லிம் வாலிபப்பெண்ணுக்குப் போலிக் கலியாணம் நடத்தப்பட்டு அவள் கர்ப்பிணியானவுடன் கைவிடப் படுகின்றாளென்றும், அப்பொழுது அவளின் கலியாணத்தை நடத்தியவர் லெவ்வையல்லாதவராய்க் காணப்படுகிறார் என்றும் புத்தள மாகாணத்தில் ஆஸ்தியைப்பற்றியே வருத்தமுண்டாகிற தென்றும் சீதனத்தைப் பற்றிய வியாச்சிய மொன்று கோட்டின் முன் கொண்டு வரப்பட்டபொழுது லெவ்வைக் கடுத்தத்தை யழித்துவிட்டாரென்று தெரியவந்ததென்றும் தெரிவித்துமிருந்தனர். மேற்படி கடிதத்தைக் கண்ணுற்ற கனம் நெய்னு மரைக்கார் ஆசியர் அவர்கள் அதில் சாட்டப்பட்டுள்ள விஷயம் பாரதூரமானதென்றும் அதைக்கவனிப்பது ஆவசியமகமென்றும் கண்டு, அதையாலோசிப்பதற்காகத் தம் வீட்டில் சென்றமாதம் ஓர் சபை கூட்டினார்கள். அச்சபையில் சில முஸ்லிம் கனதனவான்களும் லோயர்மார்களும் சமுகங்கொடுத்தார்கள். கனம். சின்னலெவ்வை மரைக்கார் மருமூது ஆசியார் அவர்கள் சபா நாயகராய்த் தெரியப்பட்டார்கள். கனம். குழந்தமரைக்கார் மீரா லெவ்வை மரைக்கார் அவர்கள் எழுத்துக் காரியஸ்தராய் ஏற்படுத்தப்பட்டார்கள். அச்சபையில் மேற்படி விஷயம் நன்றாய் ஆலோசிக்கப்பட்டு லோயர்மார்களும் மற்றவர்களும் தம் கருத்துகளை வெளிப்படுத்திய பின்பு அச்சட்டத்தைப் பலபந்தப் படுத்துகிறதே நல்லதென்றும், அவ்வாறு பலபந்தப் படுத்தும்பொழுது தலாக்கு பஸஹு ஆகியவைகளைப் பதிவுசெய்யவும் சட்டமியற்ற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் அச்சட்டத்தில் இஸ்லாமார்க்கப் பிரமாண

த்துக்கு நேராய் அமைக்க வேண்டிய காரியங்களை யோர் றிப்போட்டில் அமைத்து முஸ்லிம்களின் ஓர் பொதுச் சபை முன் வைத்தற்குக் கனதனவான்களையும் லோயர்மார்களையு முடையவோர் காரிய சபை ஸ்தாபிக்கப்பட்டது. அந்தக்காரிய சபை தனக் நச்சாட்டப்பட்ட விஷயத்தைத் தக்கபடி கவனிக்கக்கூடியதாதலின் அதன் றிப்போட்டு மதிக்கத்தக்கதாயிருக்குமென்று நாம் நம்புகின்றோம். அக்காரிய சபையார் தாம் மேற்படி காரியத்துக்காப் நியமிக்கப்பட்டிருக்கிற செய்தியை இலங்கையிலுள்ள சர்வ முஸ்லிம்களுக்கும் தெரிவித்து வோர் விளம்பரம் வெளிப்படுத்தவும், புதிதாயுண்டாக்க நாடுகிற சட்டத்தில் நிக்காஹ், தலாக்கு, பஸஹ் ஆகியவைகளைக் குறித்து இஸ்லாமார்க்கப் பிரமாணத்திற்கு நேராய்அமைக்க வேண்டிய காரியங்களைத் தங்களுக்குத் தெரிவிக்குமாறு அவர்களைக்கேட்கவும் தீர்மானித்திருக்கிறார்கள். அவ்வாறு கேட்கப்படுகிற முஸ்லிம்கள் தாமறிந்த காரியங்களை மேற்படி காரிய சபையார்களுக்குத் தெரிவிப்பார்களென்று நம்புகின்றோம். நிற்க.

முகம்மதியர்களின் விவாகச்சட்டத்தைத் திருத்தவேண்டிய வொழுங்கைக் குறித்து எமது கருத்தைச் சென்ற சஞ்சிகையில் மேற்படி காரிய சபைக்குத் தெரிவித்திருக்கின்றோம். ஆகிலும் அது இங்கிலீஷிலிருப்பதால் எமது பத்திரிகையை வாசிப்பவர்களுள் இங்கிலீஷறியாதவர்கள் விளங்கிக் கொள்ளும் பொருட்டு அதனை யிங்கு தருகின்றோம்.

1886 ம் ஆண்டின் முகம்மதியரின் விவாகச் சட்டத்தின் 17 ம் பிரிவில் இஸ்லாமார்க்கத்தை யனுசரிப்பவர்களின் விவாகம் அச்சட்டப்படி பதிவுசெய்யப்பட்டாலன்றி பலமானதாயிரா தென்று கூறப்பட்டிருந்தது. இஸ்லாமார்க்கப்படி ஓர் கலியாணத்தைப் பலமானதாக்குதற்கு ஏதேனும் பதிவு தேவையின்று. ஆதலின் மேற்படி பிரிவுக்குத்தடை பேசப்பட்டது. அந்தப் பிரிவின்படி இஸ்லாமார்க்கப்படி பலமானதாயுள்ள விவாகம் மேற்படி சட்டப்படி பதிவு செய்யப்படாதிருக்கில் பலமற்றதாகிவிடும். ஆகையால் 1888 ம் ஆண்டிலியற்றப்பட்ட திருத்த சட்டத்தில் 1886 ம் ஆண்டின் முகம்மதிய விவாகச் சட்டப்படி முகம்மதிய விவாகங்கள் பதிவு செய்யப்படுவது அல்லது பதிவுசெய்யப் படாதிருப்பது கொண்டு பலமுள்ளவைகளாயும் பலமற்றவைகளாயும் போகாவென்றும், அவை மற்றப்படி பலமற்றவைகளாய் அல்லது பலமுள்ளவைகளாய் இருக்கலாமென்றும் கூறப்பட்டது. இந்நியாயத்தாலேயே சர்வ முஸ்லிம்களும் தம் விவாகங்களை மேற்படி சட்டப்படி பதிவு செய்தற்குக்கடமையில்லை. ஒரு வலிகாரன் இரண்டு சாட்சிகளின் முன் ஒரு பெண்ணை விவாக முடித்துக்கொடுத்தால், பதிவிருந்தாலும் இல்லாதபோனாலும், அவ்விவாகம் பலமுள்ளதென்ற எங்கள் மார்க்கச் சட்டத்தில் குறுக்கிடவேண்டியதில்லை. ஆகிலும் விவாகமுடிக்கிற புருஷனினதும் பெண்சாதியினதும் அவர்களின் மக்களினதும் பலனுக்காய் அவ்விவாகத்துக்கு எழுத்திற் சாக்ஷி இருப்பது அவசியகம். அவ்வித சாக்ஷி யிருப்பின் அதைக்கொண்டு விவாகத்தை யெப்பொழுதும் அத்தாட்சிப் படுத்தக்கூடும். வாய்மொழியான சாட்சியை யெப்பொழுதும் பெற்றுக்கொள்ளக் கூடாது. நம்பப்படத்தக்க சாட்சி எழுத்தில்லாத நிமித்தம் விவாகத்திலுடந்தையான பெண்ணும் அவளின் மக்களும் நஷ்டமடைந்ததை நாங்கள் அனுபோகத்தைக் கொண்டறிந்திருக்கின்றோம். ஆதலால் ஒரு விவாகத்திலுடந்தையான புருஷன் அவ்விவாகத்தை 1886 ம் ஆண்டின் முகம்மதிய விவாகச் சட்டப்படி பதிவுசெய்வதை யவனின் கடமையாக்க வேண்டும். அக்கடமையை நிறைவேற்றாத புருஷனைத் தெண்டத்தைக்கொண்டு அல்லது சிறையிருப்பைக்கொண்டு அல்லது இரண்டையுங் கொண்டு ஆக்கினைசெய்ய வேண்டும். இக்கடமையை யவனிற் சுமத்துதற்கு நியாயமான தடையிருப்பதாய் எமக்கு விளங்கவில்லை. அவன் பெண்சாதியை யசட்டை செய்யக் கூடும். அப்பொழுது அவள் அவனிடம் செலவு கேட்கக் கூடும், அவன் அவளைத் தலாக்குச் சொல்ல அல்லது அவள் அவனை பஸஹ் செய்யக் கூடும். அப்பொழுது அவள் அவனிடம் மஹறும் செலவுங் கேட்கக் கூடும். இவ்விஷயங்களைக்குறித்துத் தர்க்கம் வந்தால் விவாகத்தை முதல் அத்தாட்சிப் படுத்த

வேண்டும். அக்காலத்தில் அந்தக்கலியாணத்தை நடத்திய லெவ்வை மரணித்திருத்தால் அல்லது வுயிரோடிருந்து பொய்ச் சாட்சி சொன்னால் அப்பெண்ணும் அவளின் பிள்ளைகளும் நஷ்டமடைவார்கள். தன்விவாகத்தைப் பதிவு செய்யாத புருஷனுக்கு விரோதமாய் வழக்கெடுக்குதற்கு றஜிஸ்றர் லெவ்வை மார்களுக்கும் அவர்களில்லாத விடத்தில றஜிஸ்றருக்கும் தத்துவங்கொடுக்க வேண்டும். அந்தப் புருஷன் தனது விவாகத்தைப் பதிவுசெய்யும் வரையில் அவனை யாக்கினைக் கேதுவானவனாக்கவேண்டும். எங்கள் மார்க்கப்படி விவாகத்தைப் பலமுள்ளதாக்குதற்குப் பதிவு தேவையில்லாதிருக்க நாங்கள் ஞாபகத்துக் கெட்டாத காலமுதல் கடுத்தமெழுதி வருகின்றோம். கடுத்தமெழுதுகிற நோக்கம் எழுத்தில் விவாகத்துக் கத்தாட்சி வைத்துக்கொள்ளுதற்கே. ஆகிலும் கடுத்தமெழுதுபவர்களும் அதனைப் பாதுகாப்பவர்களுமாகிய லெவ்வைமார்களுட் சிலர் கடுத்தங்களை மறைத்துவிட அல்லது அழித்துவிட அல்லது அவற்றில் இடையிலே தேனு வெழுதிவிடக் கூடியவர்களாயிருப்பதாலும், கடுத்தங்கள் சோதனைப் பண்ணப் படாமலும் காக்கப் படாமலு மிருக்கின்றன வாதலாலும், சில கிராமங்களில் லெல்லை மார்களல்லாதவர்களாலுங் கடுத்தங்க லெழுதப்படுகின்றன வாதலாலும், கடுத்தங்களில் தரப்படுகிற விவாங்களுக்கும் 1886 ம் ஆண்டின் விவாக றஜிஸ்தரில் தரப்படுகிற விவரங்களுக்கும் இடையில் வித்தியாச மில்லாதிருப்பதாலும், 1886 ம் ஆண்டின் சட்டப்படி பதிவு செய்வதைக் கடுத்தத்துக்கு பதலாக்குவதுடன் கடுத்தத்தைக் கோடுகளில் சாட்சிக்கேற்கப்படாது. விவாகத்தைப் பதிவுசெய்தால் தலாக்கையும் பதிவுசெய்ய வேண்டுமென்பது எவருக்கும் எளிதில் விளங்கும். ஆகையால் 1886 ம் ஆண்டின் சட்டப்படி விவாகங்களைப் பதிவுசெய்கிற லெவ்வைமார்களுக்கும் றஜிஸ்திருருக்கும் தலாக்குகளைப் பதிவு செய்கிற தத்துவங்கொடுக்கவேண்டும். அதற்காய் அவர்களுக்கு மாகாண றஜிஸ்திருர் புத்தகங்கள் கொடுக்கவேண்டும். விவாகங்களின் ஸர்டிபிகேட்டைப் போலவே தலாக்குகளின் ஸர்டிபிகேட்டுகளும் மாகாண றஜிஸ்திருருக்கு அனுப்பப் படல் வேண்டும். இஸ்லாமார்க்கச் சட்டப்படி ஒரு மனிதன் தன் மனைவியைக் கொஞ்சம் வெறுத்தவுடன் தலாக்குச் சொல்லி விடலாம். ஆகிலும் ஒரு பெண் தன் புருஷனைத் தள்ளுதற்கு (பஸஹ் செய்தற்கு) சில நியாயங்கள் வேண்டும். பஸஹுக் கிடங் கொடுக்கமுன் அதன் காரணம் லெவ்வையல்லாதவரால் விசாரிக்கப்படல் வேண்டும். அதை விசாரிக்கும் தத்துவத்தை முஸ்லிமான சமாதான நீதவான்களுக்கும் அவர்களில்லாத விடங்களில் தேசாதிபதியவர்களால் இதற்காய் நியமிக்கப் படுகிற காளிகளுக்கும் கொடுக்க வேண்டும். பஸஹின் காரணத்தை விசாரிக்கிற சமாதான நீதவான் அல்லது காளி தம்முன் சொல்லப்படுகிற வாய்மொழிகளை யெழுதி வைக்கவேண்டும். அவருடைய தீர்ப்புக்குச் சம்மதப்படாத புருஷன் அல்லது பெண்சாதி அதை மாகாண றஜிஸ்திருருக்கு அல்லது உதவி மாகாண றஜிஸ்திருருக்கு அப்பீலெடுக்க விடங் கொடுக்க வேண்டும். அவருடைய தீர்ப்பு தீர்மானமானதாயிருக்கும். ஒரு பெண் தன் புருஷனை பஸஹ் செய்யக் கூடிய நியாயங்கள் புதுச்சட்டத்தில் தெளிவாய்க் காட்டப்படல் வேண்டும். தன் மனைவியைத் தலாக்குச் சொல்லுகிற புருஷன் அத்தலாக்கைப் பதிவு செய்யவும், லெவ்வையினதும் சாட்சிகளினதும் சமூகத்தில் மஹறையும் எங்கள் மார்க்கச் சட்டப்படி அவளுக்குரித்தான மற்றுஞ் செலவுகளையும் அவளுக்குக் கொடுக்கவும். பலபந்தப் படுத்தப்படல் வேண்டும் அவ்வாறு தலாக்கைப் பதியாத புருஷனுக்கு ஆக்கினை கொடுக்கவேண்டும்.

மேலே தரப்பட்ட எமது கருத்துகள் முன்குறிக்கப் பட்ட காரிய சபையால் கவனிக்கப் படுமென்று நம்புகிறோம்.

## பெர்ஷிய அரசர் சாஹ் முகம்மது அலி மிர்ஸா

பெர்ஷியாவின் தற்கால அரசரான ஷாஹ் முகம்மது அலி மிர்ஸா அவர்களின் பிரதிவிம்பப்படம் இச்சஞ்சிகையில் தரப்பட்டிருக்கின்றது. ஷாஹ் முகம்மது அலிமிர்ஸா அவர்கள் 1872 ம் ஆண்டு ஜூன் மாதம் பிறந்தார்கள். அவர்கள் சீர்திருத்தத்தை விரும்பினவர்களென்றும் அவர்களின் பிதா பெர்ஷிய குடிஜனங்களுக்கு பார்லிமேந்து சபை கொடுத்ததற்கு அவர்களே காரணரென்றும் சொல்லப்படுகிறது. நாம் இங்கு சாஹ் முகம்மது அலி அவர்களின் இராச்சியத்தைக்குறித்தும அரசாட்சியைக் குறித்தும் சில செய்திகளைத் தர நாடுகின்றோம.

1880 ம் ஆண்டு பெர்ஷிய தேசம் 635,934 சதுர மைல் பிரமாணமுள்ளதென மதிக்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் அதன் வட எல்லையும கிழக் கெல்லையும் மேறகெல்லையும் திட்டப்படுத்தப்படவில்லை. அதுமுதல் வட எல்லையும் கிழக்கெல்லையும் குறிக்கப் பட்டிருக்கின்றன. ஆகிலும் துருக்கிக்கும் பெர்ஷியாவுக்கும் இடையிலுள்ள எல்லை வடக்கில் அறறட்மலை துவக்கம் தெற்கில் முஹம்ரு வரையில் இன்னும் திட்டப்படுத்தப்படவில்லை. 1881 ம் ஆண்டு பெர்ஷியதேசத்தின் குடிஜனங்களின் தொகை 7,653,600 என்று மதிக்கப்பட்டது. தற்போது அவர்களின் தொகை 9.333,000 என்று மதிக்கப்படுகின்றது. 1880 ம் ஆண்டுக்குப்பின் பெர்ஷிய பிரஜைகளுள் பலர் குடிபெழும்பினார்கள். சில கிராமங்கள் கைவிடப்பட்டு அழிந்து போயின. ஆகிலும் அதன் பின்னர் வேறுஜனங்கள் அங்கு குடியேறி புதுக்கிராமங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. சிலகிராமங்களில் குடிஜனங்கள் வருடத்துக்கு நூற்றுக் கரை வீதம் அதிகப்படுகிறார்கள். மறு கிராமங்களில் ஒன்றரை துவககம் இரண்டு வரையிலதிகப்படுகிறார்கள். நூற்றுக்குப் பத்துமுதல் இருபது வரையில் பெண்கள் ஆண்களைப்பார்க்கிலும் அதிகப்படுகிறார்களென்று பெர்சியர்கள் கூறுகிறார்கள். ஆகிலும் இக்கணக்குத் தவறென்றும் நூற்றுக்கு இரண்டுதானும் பெண்கள் ஆண்களைப் பார்க்கிலும் அதிகப்படவில்லையென்றும் ஓர் இங்கிலீஷ் நூலாசிரியர் கூறுகிறார். அங்கு மையத்துகளைக் குளிப்பாட்டுகிறவர்களிடமுள்ள கணக்கைக் கொண்டே இறப்பவர்களின் தொகை யறியப்படுகிறதாம். கொள்ளை நோயில்லாத காலத்தில் இறப்பின் தொகை ஆயிரத்துக்கு 19 துவக்கம் 20 வரையிலென்றும் பிறப்பின் தொகை ஆயிரத்துக்கு 25 துவக்கம் 40 வரையிலென்றும் வைத்தியர்கள் கூறுகிறார்கள். 1880 ம் ஆண்டுக்குப்பின் பெர்ஷியாவில் பிரதானமாக பெரும்பட்டணங்களில் தீன் சாமான்களின் விலை யதிகப்பட்டிருக்கிறது. அதனோடு சம்பளங்களும் அதிகப்படாத நிமித்தம் மேல்வகுப்பார்களும உத்தியோகத்தர்களும் வருததப்படுகிறார்கள். அவர்கள் வேலைக்காரர்களைத் தள்ளிவிட்ட படியால் இவர்கள் தொழிலில்லாது வருந்துகிறார்கள். கைத்தொழிற் காரர்கள் சொற்ப சமபாத்தியத்தோடு காலங்கழிக்கிறார்கள். 1880 ம் ஆண்டு ஒரு மாதத்திற்கு 25 கிறான் அல்லது ஒரு தங்கப்பவுன் சமபாதிக்கிறவன் ஒரு குடும்பத்தைத் தாபரிக்கக்கூடியவனாயிருந்தனன். 1901 ம் ஆண்டு தீன் சாமான்களி

ன் விலை அதிகப்பட்டதால் அவன் குடும்பத்தை நடத்தக்கூடாதவனாகி விட்டனன். இந்நியாயத்தால் பல கிராமங்களிலும் பட்டணங்களிலும் பிறப்புக்குறைந்து விடடதாம.

பார்லிமேந்து ஸ்தாபிக்கப்பட முன் பெர்ஷிய தேச அரசாட்சி உதுமானிய அரசாட்சியைப் போல ஏகாதிபத்திய அரசாட்சியா யிருந்தது. ஆகிலுமஉதுமானிய அரசரைப்போல் பெர்ஷிய அரசர் மார்க்கத் தலைவராயிருக்கவில்லை. அரசருக்குப் பிரஜைகளின் மீதும் அவர்களின் ஆஸ்தியின் மீதும் பூரணதத்துவம் இருந்தாலும் அவர் சறஹுக்கு அதாவது மார்க்க சட்டத்திற்கு விரோதமில்லாது தமது அதிகாரத்தை நடத்த வேண்டியவரா யிருந்தனர். சாஹன்ஷாஹ் (இராசாதிராசன்) என்ற பட்டத்தை பெர்ஷிய சாஹ் உடையவராயிருந்தாலும் அவரின் தத்துவம் அந்தமட்டிருக்க வில்லை யென்றும், அவருக்கு ஒரு காலத்தில் இருந்ததத்தும் இப்பொழுதில்லை யென்றும் சில வருடங்களின் முன் லோர்டு கர்ஸன் தாமெழுதிய "பெர்ஷியாவும் பெர்ஷிய விஷயமும்" என்ற நூலில் கூறியிருக்கிறார். தற்போது உலகத்திலுள்ள சீயாக்கள் சாஹ் அவர்களைத் தங்கள் வேதத்தலைவராய் அங்கீகரிக்கவில்லை. பகுதாது கலீபாக்களுக் குண்டாயிருந்ததும் தற்போது இஸ்தம்பூலிலுள்ள சுல்த்தான் அவர்களுக்குண்டாயிருப்பதுமாகிய வேத அதிகாரம் பெர்ஷிய அரசர்களுக்கு ஒரு காலத்திலும் உண்டாயிருக்கவில்லை. சிபாவி கோத்திரத்தரசர்கள் செய்யதுமார்களாயிருந்ததால் பரிசுத்தவான்களாய்க் கவனிக்கப்பட்டார்கள். ஆகிலும் அவர்களுக்குப்பின் பெர்ஷியாவில் அரசாண்ட கோத்திரத்தவர்களுக்கும் தற்போது அரசாளுகிற கஜார் கோத்திர அரசர்களுக்கும் அந்த கண்யம் கிடையாது. கஜார் கோத்திர அரசர்கள் துருக்கிய குலத்தைச் சேர்ந்தவர்கள். அரசாட்சியில் சாஹ் அரசருக்கு ஸதர் ஆலம் என்னும் முதன் மந்திரியும்வேறு மந்திரிமார்களும் உத்தியோகத்தர்களும் உதவியாயிருந்ததோடு அவருக்குத்துணையாய் ஓர் இராச சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மந்திரிமார்களும் சாஹ் அவர்களால் நியமிக்கப்படுகிற மற்றவர்களும் அச்சங்கத்தின் அங்கத்தவர்களாயிருந்தார்கள். அந்த மந்திரிமார்கள் ஐரோப்பிய மந்திரி மார்களைப்போல் பொறுப்புள்ளவர்களல்ல, அவர்கள் ஒருகாரியத்தையும் தாமாய்ச்செய்யாது சகலகாரியங்களையும் முதன் மந்திரியின் அல்லது சாஹ் அவர்களின் தீர்மானத்துக்கு விட்டு விடுவார்கள். அரசாங்க "சால் நாமா" வில் இருபத்தேழு மந்திரிமார்கள் காட்டப்பட்டிருக்கின்றார்கள், ஆகிலும் அவர்களுட் சிலரோடு மாத்திரமே அரசர் இராசாங்க விஷயங்களை யோசிக்கிறவராயிருந்தனர்.

"மமாலிக்கி—மஹ்ரூசேயி—ஈறான்" என்று அழைக்கப் படுகிற பெர்ஷிய விராச்சியம் பல மாகாணங்களாய்ப் பிரிக்கப் பட்டிருக்கின்றது. பெரிய மாகாணங்கள் மம்லிகாத் என்றும் சிறு மாகாணங்கள் விலாயத் என்றும் அழைக்கப் படுகின்றன. இவைகள் அரசரால் நியமிக்கப் படுகிற கவர்னர் ஜனறல்களாலும் கவர்னர்களாலும் ஆளப்படுகின்றன. முன் கவர்னர் உத்தியோகங்களுக்கு ஷாஹ் அவர்களின் மக்களும் சகோதரர்களும் இனத்தவர்களு மாத்திரமே ஏற்படுத்தப் பட்டா

ர்கள். தற்போது இராசவமிசத்தைச் சேராதவர்களும் மாகாண தேசாதிபதிகளாய் நியமிக்கப்படுகிறார்கள். பெர்ஷியாவில் ஐந்து மம்லிகாத்துகளும் முப்பது விலாயத்துகளு மிருக்கின்றன.

பெர்சியாவில் நீதி நடத்துதற்கு இரண்டு விதமான கோடுகளிருக்கின்றன. ஒன்றில் வேதச்சட்டமாகிய சறஹ் நடத்தப்படுகின்றது. மற்றதில் தேச வழக்கமாகிய உறுபு நடத்தப் படுகின்றது. ஆகவே நீதி சாஹ் அரசர் அவர்களாலும் அவர்களின் பிரதிநிதிகளாலும் ஒரு சட்டப்படிக்கும் உலமாக்களால் இன்னுமொரு சட்டப்படிக்கும் நடத்தப்படுகின்றது. முந்தினவர்களின் தீர்ப்புகளும் இஸ்லாமார்க்க பிரமாணங்களுக்கு நேராயிருக்க வேண்டும். ஆகிலும் முல்லாக்களின் தீர்ப்புகள் துரைத்தனத்தாரின் கருத்துக்கும் விருப்பத்துக்கும் விரோதமானவைகளாயிருந்து அவ்விரு திறத்தவர்களுக்கு மிடையில் தர்க்கங்களும் குழப்பங்களும் உண்டுபட்டன. சறஹின்படி நீதி செய்தற்கு அரசாட்சியாரால் திட்டமான சம்பளத்தோடு நியமிக்கப்பட்டவர்கள் செய்குல் இஸ்லாம் காழி முதலியவர்களே. சிவில் விஷயங்களே சறஹ் பகுதிக்குச் சாட்டப் பட்டிருக்கின்றன. கிறிமினல் விஷயங்கள் உறுபு பகுதிக்குச்சாட்டப்பட்டிருக்கின்றன. உறுபு பகுதி அதற்குச சாட்டப்பட்ட சிவில் விஷயங்களைக் கவனிப்பது முண்டு. சறஹ் பகுதியிலுள்ள முல்லாக்களுள் நம்பப்படத்தகாதவர்க ளிருக்கிறார்களென்றும் ஆகிலும் முஜ்தஹிதுகள் உண்மையுள்ளவர்களென்றும் சொல்லப்படுகிறது. வர்த்தக வியாச்சியங்கள் வர்த்தகர்களின் ஓர் சங்கத்தால் அல்லது வர்த்தக மந்திரியால் விசாரிக்கப்படுகின்றன. இராஜதானியான திஹறினில் மலிக்குத் தஜ்ஜாரும் மாகாண பட்டணங்களில் மலிக் அமீனும் வர்த்தக சங்கங்களின் அக்கிராசனர்களா யிருக்கின்றார்கள்.

பெர்ஷியாவில் குற்றஞ்செய்த புறதேசத்தவர்கள் குற்றவாளிகளாய்க் காணப்பட்ட பின்பு புறதேச தானாதிபதிகளுக்கு வொப்புக் கொடுக்கப்படுகிறார்கள். அப்பிரதிநிதிகள் அக்குற்றவாளிகளைத் தம் தேசங்களுக்கு ஆக்கினை செய்யப்படுதற்காய் அனுப்புகிறார்கள், அல்லது பெர்ஷியாவிலேயே தெண்டத்தையும் சிறையிருப்பையும் கொண்டு ஆக்கினை செய்கின்றார்கள். இந்த விஷயத்தில் தானாதிபதிகளின் தத்துவங்கள் வேறுபடுகின்றன. சிலர் ஓர் குற்றவாழியை கொலைக்குத் தீர்மானிக்கக் கூடியவர்கள். சிலர் அவ்வாறு செய்யக் கூடாதவர்கள். இவர்கள் தெண்டமும் சொற்ப கால சிறையிருப்புமே விதிக்கலாம். அங்குள்ள புறதேசத்தவர்களுக்கிடையிலுண்டாகும் ஸிவில் வழக்குகளும் கிரிமினல் வழக்குகளும் பெர்ஷிய துரைதனத்தின் அதிகாரத்துக் கப்பாலுள்ளவை. அவை பெர்ஷியாவிலுள்ள புறதேச தானாதிபதிகளாலேயே விசாரிக்கப்படுகின்றன. அங்கு மகா பிரித்தானியா, றாசியா, பிறான்ஸ், துறுக்கி, ஆஸ்திரியா ஹங்கேரி, ஜெர்மனி, அமரிக்காவின் ஐக்கியமாணங்கள், இற்றாலி, பெல்ஜியம், நெதர்லண்டு(ஓலாந்தா)ஆகிய தேசங்களின் பிரதிநிதிகளிருக்கின்றார்கள்.

பெர்ஷியாவிலுள்ள குடிஜனங்களுள் 80 லட்சம் பேர்கள் சீயா மதகபைச் சேர்ந்த முஸ்லிம்கள். 8 அல்லது 9 லட்சம் பேர்கள் சுன்னிகள். இவர்களுள் பெரும்பா

லார் வடமேற்கு பெர்ஷியாவிலுள்ள குர்திகள். 80 அல்லது 90 ஆயிரம் பேர்கள் கிறீஸ்தவர்கள். 63 ஆயிரம் பேர்கள் யூதர்கள். 9 ஆயிரம் பேர்கள் ஸொரோஸ்திரியர்கள் (மஜூஸிகள்.)

குர்ஆன் ஓதவும் மார்க்க சட்டங்களை வியாக்கியானப்படுத்தவும் கூடியவர்கள் முல்லாக்களென்றழைக்கப்படுகிறார்கள். முல்லாக்களுள் வேதகல்வியை அதிகமாய்க் கற்றவர் முஜ்தஹிது என்றழைக்கப்படுகிறார். வேதசட்டத்தைக் குறித்த விஷயங்கள் முல்லாக்களிடத்திலேயே விசாரிக்கப்படுகின்றன. அவர்களே வேத சபைகளை நடத்துகிறார்கள். பள்ளிவாசல்களில் போதிக்கிறார்கள். கல்விச்சாலைகளில் படித்துக் கொடுக்கிறார்கள. மேலும் அவர்களே நியாயாதிபதிகளாயும் சிரேஷ்ட போதகர்களாயும் அரசாட்சியாரால் நியமிக்கப்படுகிறார்கள். முக்காலத்தில் நான்கு அல்லது ஐந்து முஜ்தஹிதுகளே பெர்ஷியாவிலிருந்தனர். இப்பொழுது அதிகப் பெயர்களிருக்கிறார்கள். ஆகிலும் அவர்களுள் சொற்பப்பேர்களின் தீர்ப்புகளே தீர்மானமானவைகளாயும் அப்பீல் இல்லாதவைகளாயும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எல்லாரிலும் அதிக தத்துவமுள்ள முஜ்தஹிது கர்பலாவில் அல்லது நஜபில் இருப்பவரே. அவரே நபியினதும இமாமினதும் பிரதிநிதியென்று சியாக்களெண்ணுகிறார்கள். சாஹ் அவர்களும் அவர்களின் அரசாட்சியும் முல்லாக்களையும முஜ்தஹிதுகளையும் ஏற்படுத்துவதில்லை. செய்குல் இஸ்லாமும் காளிகளும அரசாட்சியாரிடம சம்பளம் பெறுகின்ற பள்ளிவாசல்களின் சிரேஷ்ட குருமார்களுமே சாஹ் அவர்களால் நியமிக்கப்படுகிறார்கள். நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் வமிசத்திலுள்ள இமாம்கள் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிற பள்ளிவாசல்களைப் பாதுகாப்பவர்களாய் நியமிக்கப்படுகிற குருமார்கள் முதவல்லியென்று அழைக்கப்படுகிறார்கள். இது பெர்ஷியாவில் மெத்தக் கண்யமுள்ள வுத்தியோகம். இதற்கு நியமிக்கப்படுகிறவர்கள் இராச்சியத்திலுள்ள மந்திரிகளும பிரதானிகளுமே. மஷத்திலுள்ள இமாம் றிளா அவர்களின் பள்ளிவாசலின் முதவல்லி ஓர் தேசாதிபதியின் செல்வாக்கைப் பார்க்கிலும அதிகமான செல்வாக்கையுடையவர். முற்காலத்தில் முல்லாக்களுக்கு அதிக தத்துவமுண்டாயிருந்தது. சகல ஸிவில் வழக்குகளும் கிறிமினல் வழக்குகளும் அவர்களால் விசாரிக்கப்பட்டன. அவர்கள் ஸதருஸ்ஸுதூர் என்ற பட்டத்தைப் பெற்ற ஓர் சிரேஷ்டகுருவுக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள். அவரே காளிகளை நியமித்தனர். பள்ளிவாசல்களினதும் பள்ளிக் கூடங்களினதும் சொத்துகளைப்பராபரித்தனர். ஆகிலும் சாஹ் சாபி என்பவர் 17 ம் நூறாண்டில் இரண்டு சிரேஷ்ட குருமார்களை நியமித்தனர், ஒருவர் இராசகுடும்பத்தவர்களுக்கும் மற்றவர்சாமானிய மனிதர்களுக்குமே. 18 ம் நூறாண்டில் நாதிர் சாஹ் மேற்படி சிரேஷ்ட குருவுந்தியோகத்தை யழித்துவிட்டுத் தமது போர்வீரர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக பள்ளிவாசல் சொத்துகளையும் நிலங்களையும் எடுத்துக் கொண்டனர். அது முதல் உலமாக்களின் தத்துவம பெர்ஷியாவில் குறைந்துவிட்டது. உலமாக்களுட் சிலர் பெர்ஷியாவில் சறஹுக்கு விரோதமில்லாமல சீர்திருத்தங்களை யு

ண்டாக்குதற்குச் சம்மதமுடையவர்களாகவே யிருந்தார்கள்.

பெர்ஷிய பாஷையும் குறுஆன் ஓதக் கூடிய மட்டுக்கு அறபுப் பாஷையும் கணிதமும் கற்பிக்கப்படுகிற மக்தப் என்னும் மூல பாடசாலைகள் பெர்ஷியாவின் ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அப்பாடசாலைகள் அரசாட்சியாரிடமிருந்து உதவிப்பணம் பெற்றுக்கொள்வதில்லை. அங்கு ஏழுமுதல் பன்னிரண்டு வயது வரையிலுள்ள பாலியர்கள் கற்கிறார்கள். பட்டணங்களில் மதிரஸாக்களிருக்கின்றன. அங்கு வாலிபர்களுக்கு பெர்ஷியபாஷை, அறபுப்பாஷை குறுஆன், இஸ்லாமார்க்கச் சட்டம் தர்க்கசாஸ்திரம், அணியிலக்கணம், பிலோஸபி முதலிய விஷயங்கள் படித்துக்கொடுக்கப்படுகின்றன. இவை பள்ளிவாசல் பணங்களால் தாபரிக்கப்படுகின்றன. இங்கு படித்துக்கொடுப்பவர்கள் உலமாக்களே. தம்மக்கள் குருமார்களாவதை விரும்பாத குடும்பத்தவர்கள் அந்தரங்க வாத்திகளைக் கொண்டு தமமக்களுக்குக் கல்விபயிற்றுகிறார்கள். சிலர் இங்கிலீஷிய பிறான்ஸிய வாத்திகளைக் கொண்டு படித்துக்கொடுக்கிறார்கள். சிலர் தம்மக்களை இங்கிலாந்து, பிறான்ஸ், ஜெர்மனி, றாசியா ஆகிய தேசஙகளுக்குக் கல்விகற்பதற்காய் அனுப்பி யிருக்கிறார்கள். காலஞ்சென்ற சாஹ அவர்களின் பிதாவான நஸ்றுத்தீன் சாஹ அவர்களின்காலத்தில் பிறான்ஸிய கல்லூரியைப் போன்றவோர் கல்லூரி திஹறினில் ஸ்தாபிக்கப்பட்டது. அங்கு மேற்குத் தேச சாஸ்திரங்களும் பாஷைகளும பயிற்றப்பட்டன. அதற்கு ஐரோப்பாவிலிருந்து இராணுவ வாத்திகளும் ஸிவில் வாத்திகளும் அழைப்பிக்கப்பட்டார்கள். அதற்காய் அரசாட்சி பெருந்தொகையான பணம் செலவு செய்திற்று, அப்பாடசாலையில் கல்விதருமமாய்ப் பயிற்றப்படுவதோடு மாணக்கர்களுக்கு உடைகளும் சிலருக்குத் தீனும் அரசாட்சியாரால் கொடுக்கப்படுகின்றன. மேற்படி பாடசாலையைப் போன்ற இன்னுமொரு பாடசாலை சொற்ப காலத்தின் பின்பு தப்ரீஸில் இஸ்தாபிக்கப்பட்டது. காலஞ்சென்ற சாஹ முஸபறுத்தீன் அவர்கள் கொலுவுக்கு வந்த பின்னர் கல்வியை அதிகப்படுத்த நாடியபொழுது பெர்ஷியாவிலுள்ள மேன்மக்கள் ஓர் சபை கூடி கையொப்பப்பணங்கள் சேர்த்து அவற்றைக் கொண்டு பல கல்விச் சாலைகளை திஹறினில் 1898 ம் ஆண்டு ஸ்தாபித்தார்கள். ஒரு வருடத்தின் பின்பு அப்பாடசாலைகள் கல்வி விஷய மந்திரியின் பராபரிப்பின் கீழாக்கப்பட்டன. அப்புதுப் பாடசாலைகளில் 1000 துவக்கம் 1400 மணக்கர்கள் வரையில் படித்தார்கள்.

பெர்ஷியாவின் வருமானம் நான்குவழிகளால் பெற்றுக்கொள்ப்பட்டது. முதலாவது நிலங்களிலிருந்தும், பக்ஷி மாடு ஆகியவைகளுக்காயும், சாப்புக்காரர், சித்திரகாரர் வர்த்தகர் ஆகியவர்களிடமும் பெற்றுக் கொள்ளுகிற வரி. இரண்டாவது அரசாட்சிக்குடைய நிலங்களின் வருமானம். மூன்றாவது தீர்வை. நாலாவது அரசாட்சியின் சுதந்தரவர்த்தகத்தைக் குத்தகைகொடுத்துப் பெறும் வருமானம். இந்தவழிகளால் 1876 ம் ஆண்டு பெர்ஷிய அரசாட்சிக்குக் கிடைத்தவருமானம் 5 கொடியே 87 லட்சம் கிறான். 1884 ம் ஆண்டு 5 கோடியே 8 லட்சம கிறான். 1890 ம ஆண்டு 6 கோடி கிறான். 1900 ம் ஆண்டு 7

லார் வடமேற்கு பெர்ஷியாவிலுள்ள குர்திகள். 80 அல்லது 90 ஆயிரம்பேர்கள் கிறீஸ்தவர்கள். 63 ஆயிரம் பேர்கள் யூதர்கள். 9 ஆயிரம் பேர்கள் ஸொரோஸ்திரியர்கள் (மஜூஸிகள்.)

குறுஆன் ஓதவும் மார்க்க சட்டங்களை வியாக்கியானப்படுததவும் கூடியவர்கள் முல்லாக்களென்றழைக்கப்படுகிறார்கள். முல்லாக்களுள் வேதகல்வியை அதிகமாய்க் கற்றவர் முஜ்தஹிது என்றழைக்கப்படுகிறார். வேதசட்டத்தைக் குறித்த விஷயங்கள் முல்லாக்களிடத்திலேயே விசாரிக்கப்படுகின்றன. அவர்களே வேத சபைகளை நடத்துகிறார்கள். பள்ளிவாசல்களில் போதிக்கிறார்கள். கல்விச்சாலைகளில் படித்துக் கொடுக்கிறார்கள. மேலும் அவர்களே நியாயாதிபதிகளாயும் சிரேஷ்ட போதகாகளாயும் அரசாட்சியாரால் நியமிக்கப்படுகிறார்கள். முக்காலத்தில் நான்கு அல்லது ஐந்து முஜ்தஹிதுகளே பெர்ஷியாவிலிருந்தனர். இப்பொழுது அதிகப் பெயர்களிருக்கிறார்கள். ஆகிலும் அவர்களுள் சொற்பப்பேர்களின் தீர்ப்புகளே தீர்மானமானவைகளாயும் அப்பீல் இல்லாதவைகளாயும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எல்லாரிலும் அதிக தததுவமுள்ள முஜ்தஹிது கர்பலாவில அல்லது நஜபில் இருப்பவரே. அவரே நபியினதும இமாம இனதும் பிரதிநிதியென்று சியாக்களெண்ணுகிறார்கள். சாஹ் அவர்களும் அவர்களின் அரசாட்சியும் முல்லாக்களையும முஜ்தஹிதுகளையும் ஏற்படுத்துவதில்லை. செய்குல் இஸ்லாமும் காளிகளும அரசாட்சியாரிடம சம்பளம் பெறுகின்ற பள்ளிவாசல்களின் சிரேஷ்ட குருமார்களுமே சாஹ் அவர்களால் நியமிக்கப்படுகிறார்கள். நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் வமிசத்திலுள்ள இமாம்கள் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிற பள்ளிவாசல்களைப் பாதுகாப்பவர்களாய் நியமிக்கப்படுகிற குருமார்கள் முதவல்லியென்று அழைக்கப்படுகிறார்கள். இது பெர்ஷியாவில் மெத்தக் கண்யமுள்ள வுத்தியோகம். இதற்கு நியமிக்கப்படுகிறவர்கள் இராச்சியத்திலுள்ள மந்திரிகளும பிரதானிகளுமே. மஷத்திலுள்ள இமாம் றிளா அவர்களின் பள்ளிவாசலின் முதவல்லி ஓர் தேசாதிபதியின் செல்வாக்கைப் பார்க்கிலும் அதிகமான செல்வாக்கையுடையவர். முற்காலத்தில் முல்லாக்களுக்கு அதிக தததுவமுண்டாயிருந்தது. சகல ஸிவில் வழக்குகளும் கிறிமினல் வழக்குகளும் அவர்களால் விசாரிக்கப்பட்டன. அவர்கள் ஸதருஸ்ஸுதார் என்ற பட்டத்தைப் பெற்ற ஓர் சிரேஷ்டகுருவுக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள். அவரே காளிகளை நியமித்தனர். பள்ளிவாசல்களினதும் பள்ளிக் கூடங்களினதும் சொத்துகளைப்பராபரித்தனர். ஆகிலும் சாஹ் சாபி என்பவர் 17 ம் நூற்றாண்டில் இரண்டு சிரேஷ்ட குருமார்களை நியமித்தனர், ஒருவர் இராசகுடும்பத்தவர்களுக்கும் மற்றவர்சாமானிய மனிதர்களுக்குமே. 18 ம் நூற்றாண்டில் நாதிர் சாஹ் மேற்படி சிரேஷ்ட குருவுத்தியோகத்தை யழித்து விட்டுத் தமது போர்வீரர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக பள்ளிவாசல் சொத்துகளையும் நிலங்களையும் எடுத்துக் கொண்டனர். அது முதல் உலமாக்களின் தத்துவம் பெர்ஷியாவில் குறைந்து விட்டது. உலமாக்களுட் சிலர் பெர்ஷியாவில் சறஹுக்கு விரோதமில்லாமல் சீர்திருத்தங்களை யு

ண்டாக்குதற்குச் சம்மதமுடையவர்களாகவே யிருந்தார்கள்.

பெர்ஷிய பாஷையும் குறுஆன் ஓதக் கூடிய மட்டுக்கு அறபுப் பாஷையும் கணிதமும் கற்பிக்கப்படுகிற மக்தப் என்னும் மூல பாடசாலைகள் பெர்ஷியாவின் ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அப்பாடசாலைகள் அரசாட்சியாரிடமிருந்து உதவிப்பணம் பெற்றுக்கொள்வதில்லை. அங்கு ஏழுமுதல் பன்னிரண்டு வயது வரையிலுள்ள பாலியர்கள் கற்கிறார்கள். பட்டணங்களில் மதிரஸாக்களிருக்கின்றன. அங்கு வாலிபர்களுக்கு பெர்ஷியபாஷை, அறபுப்பாஷை குறுஆன், இஸ்லாமார்க்கச் சட்டம் தர்க்கசாஸ்திரம், அணியிலக்கணம், பிலோஸபி முதலிய விஷயங்கள் படித்துக்கொடுக்கப்படுகின்றன. இவை பள்ளிவாசல் பணங்களால் தாபரிக்கப்படுகின்றன. இங்கு படித்துக்கொடுப்பவர்கள் உலமாக்களே. தம்மக்கள் குருமார்களாவதை விரும்பாத குடும்பத்தவர்கள் அந்தரங்க வாத்திகளைக் கொண்டு தமமக்களுக்குக் கல்வி பயிற்றுகிறார்கள். சிலர் இங்கிலீஷிய பிறான்ஸிய வாத்திகளைக் கொண்டு படித்துக்கொடுக்கிறார்கள். சிலர் தம்மக்களை இங்கிலாந்து, பிறான்ஸ், ஜெர்மனி, றாசியா ஆகிய தேசஙகளுக்குக் கல்விகற்பதற்காய் அனுப்பி யிருக்கிறார்கள். காலஞ்சென்ற சாஹ் அவர்களின் பிதாவான நஸ்றுத்தீன் சாஹ் அவர்களின்காலத்தில் பிறான்ஸிய கல்லூரியைப் போன்றவோர் கலலூரி திஹறினில் ஸ்தாபிக்கப்பட்டது. அங்கு மேற்குத் தேச சாஸ்திரங்களும் பாஷைகளும பயிற்றப்பட்டன. அதற்கு ஐரோப்பாவிலிருந்து இராணுவ வாத்திகளும் ஸிவில் வாத்திகளும் அழைப்பிக்கப்பட்டார்கள். அதற்காய் அரசாட்சி பெருந்தொகையான பணம் செலவு செய்திற்று. அப்பாடசாலையில் கல்விதருமமாய்ப் பயிற்றப்படுவதோடு மாணாக்கர்களுக்கு உடைகளும் சிலருக்குத் தீனும் அரசாட்சியாரால் கொடுக்கப்படுகின்றன. மேற்படி பாடசாலையைப் போன்ற இன்னுமொரு பாடசாலை சொற்ப காலத்தின் பின்பு தப்ரீஸில் இஸ்தாபிக்கப்பட்டது. காலஞ்சென்ற சாஹ் முஸபறுத்தீன் அவர்கள் கொலுவுக்கு வந்த பின்னர் கல்வியை அதிகப்படுத்த நாடியபொழுது பெர்ஷியாவிலுள்ள மேன்மக்கள் ஓர் சபை கூடி கையொப்பப்பணங்கள் சேர்த்து அவற்றைக் கொண்டு பல கல்விச் சாலைகளை திஹறினில் 1898 ம் ஆண்டு ஸ்தாபித்தார்கள். ஒரு வருடத்தின் பின்பு அப்பாடசாலைகள் கல்வி விஷய மந்திரியின் பாரபரிப்பின் கீழாக்கப்பட்டன. அப்புதுப் பாடசாலைகளில் 1000 துவக்கம் 1400 மணாக்கர்கள் வரையில் படித்தார்கள்.

பெர்ஷியாவின் வருமானம் நான்குவழிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டது. முதலாவது நிலங்களிலிருந்தும், பக்ஷி மாடு ஆகியவைகளுக்காயும், சாப்புக்காரர், சித்திரகாரர் வர்த்தகர் ஆகியவர்களிடமும் பெற்றுக் கொள்ளுகிற வரி. இரண்டாவது அரசாட்சிக்குடைய நிலங்களின் வருமானம். மூன்றாவது தீர்வை. நாலாவது அரசாட்சியின் சுதந்தரவர்த்தகத்தைக் குத்தகைகொடுத்துப் பெறும் வருமானம். இந்தவழிகளால் 1876 ம் ஆண்டு பெர்ஷிய அரசாட்சிக்குக் கிடைத்தவருமானம் 5 கோடியே 87 லட்சம் கிறான். 1884 ம் ஆண்டு 5 கோடியே 8 லட்சம கிறான். 1890 ம ஆண்டு 6 கோடி கிறான். 1900 ம் ஆண்டு 7

கோடி கிரான். ஆகிலும் 1876 ம் ஆண்டு இருந்ததைப்பார்க்கிலும் 1900 ம் ஆண்டு கிரான் விலை குறைந்து விட்டதால் 1876ம் ஆண்டு 1 கோடியே 9 லட்சத்து 50 ஆயிரம் பவுனாயிருந்த வருமானம் 1900 ம் ஆண்டில் 1 கோடியே 4 லட்சம் பவுன் வரையில் குறைந்து விட்டது. சில வருடங்களின் முன் வரையில் வருடாந்த செலவு வருடாந்த வருமானத்தைப் பார்க்கிலும் குறைவானதாயிருந்தது. பாக்கிப் பணம் சாஹு அவர்களின் பொக்கிஷ சாலைக்குக்கொடுக்கப்பட்டது. ஆகிலும் புதிதாய் வருமானம் குறைந்து விட்டதால் செலவுகள் நிலுவையாகவும் கடன் வாங்கவும் நேரிட்டது. 1892 ம் ஆண்டு பெர்ஷிய அரசாட்சி பெர்ஷியாவிலுள்ள பிரிட்டிஷியரின் வங்கியிடம் 5லட்சம் பவுன் நூற்றுக்காறு விதம் கடன் வாங்கிற்று. 1900 ம் ஆண்டு மேற்படி அரசாட்சி ருசிய அராசாங்க வங்கியிடம் 2 கோடியே 4 லட்சம் பவுன் நூற்றுக்கைந்து விதம் கடன் வாங்கிற்று.

பெர்ஷிய இராணுவத்தில் பெயரளவில் லட்சம் போர் வீரர்களிருந்தாலும் 30 ஆயிரம் பேர்களே கொடிகளோடு சேவிப்பவர்களென்று லோர்டு கர்ஸன் தமது புத்தகத்தில் கூறியிருக்கின்றார். 1807 ம் ஆண்டுக்கு முன் பெர்ஷியாவில் ஒழுங்கான சேனையிருக்கவில்லை. அந்த ஆண்டில் சில காலாட் சேனைகள் உண்டாக்கப்பட்டு ஜனறல் ஜார்டேன் என்பவரின் கீழ் பெர்ஷியாவுக்குச்சென்ற பிரான்ஸிய இராணுவ தானாபத்தியத்தால் பழக்கப்பட்டன. அது முதல் ஏழு இராணுவ தானாபதியர் மகாபிரித்தானியா, பிரான்ஸ், ஆஸ்திரியா, ருசியா ஆகிய தேசங்களிலிருந்து பெர்ஷியாவுக்கு பெர்ஷிய அரசாட்சியின் கேள்விப்படி அனுப்பப்பட்டன. ஸ்பேனியர், இற்றலியர், பிரான்ஸியர், பவேரியர், ஆஸ்திரியர், புருசியர், பிரிட்டிஷியர், டனிசியர், பல்கேரியர் ஆகிய அன்னிய தேசத்தார்களிலிருந்து பெர்ஷியாவில் இராணுவவுத்தியோகத்தர்களும் ஸிவில் உத்தியோகத்தர்களும் இராணுவ உபாத்திகளும் நியமிக்கப்பட்டார்கள். 1879 ம் ஆண்டு ருசியதானாபத்தியத்தாலுண்டாக்கப்பட்டு "கொஸாக் பட்டாளம்" என்று அழைக்கப்படுகின்ற பெர்ஷிய சேனையிதுகாலும் ருசிய வுத்தியோகத்தர்களையுடையதாயிருக்கின்றது. தற்போது அந்தச்சேனையிலுள்ள ஆட்கள் 1500 பேர்வரையிலதிகப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். அதற்கு வொருவருடத்திற்கு 50,000 பவுன் செலவாகின்றது. இராணுவத்துக்காய் வருடாந்தம செலவு செய்யப்படுகிற தொகை பெர்ஷியதுரைத்தனத்தின் வருமானத்தில் மூன்றிலொருபங்கு அல்லது அதற்குக் கொஞ்சங்கூட விருக்கும்.

பெர்ஷியாவில் கம்பளம், சால்வை, வுலன், பஞ்சு வஸ்திரங்கள், பட்டுப்புடவை முதலியவைகள் உண்டாக்கப்படுகின்றன. ஒருவருடத்துக்கு 10 மிலியன் பவுன் பெறுமதியுள்ள சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன. பெர்ஷிய கொடியின் கீழுள்ள வாத்தகக்கப்பல்கள் பெர்ஷிய குடாவிலுள்ள துறை முகங்களுக்கிடையில் மாத்திரம் போக்குவரவு செய்கின்றன. பெர்ஷியாவில் 800 மைல் தூரத்தையுள்ள நான்கு வழிகளைத்தவிர வுள்ள மற்றும் வழிகள் கோவேறு கழுதைகள் மாத்திரம் போகக் கூடியவையென்றும், மேலும் உ

ஷ்ணகாலத்திலன்றி மற்றும காலங்களில் அவ்வழிகள் உபயோகப் படாவென்றும சொல்லப்படுகின்றது. 8 மைல் தூரத்துக்கு ரேல்வேயும் 6½ மைலுக்குத் திரும்வேயும் ஓர் பெல்ஜிய கம்பனியால் அமைக்கப் பட்டிருக்கின்றன. 1874 ம் ஆண்டு வரையில் தபால் ஒழுங்கு சபர்சிபாசி என்றழைக்கப்பட்ட சேவார் உத்தியோகத்தரின் கையிலிருந்தது. அவரே கடிதங்களையும் பார்ஸல்களையும் பொறுப் பின்றித் தமது காரியகாரர்களைக் கொண்டு பல பாகங்களுக்கு அனுப்புகிறவராயிருந்தனர். ஆகிலும் நஸ்றுத்தீன் சாஹ் ஐரோப்பாவுக்குப் போய் வந்த பிறகு வொழுங்கான தபால் பெர்ஷியாவில் ஸ்தாபிக்கப்பட்டது. 3700 மைலுக்குத் தந்தி பெர்ஷிய அரசாட்சியாலமைக்கப்பட்டு பெர்சிய வுத்தியோகத்தர்களால் நடத்தப்படுகின்றது. இதுவுமன்றி ருசிய பிறிட்டிஷிய கம்பனிகளால் வேறு தந்திக் கம்பிகள் பெர்ஷியாவின் பல பாகங்களில் ஸ்தாபிக்கப்பட்டு நடத்தப்படுகின்றன. 1888 ம் ஆண்டுக்கு முன் பெர்ஷியாவில் வங்கி இருக்கவில்லை. அதுவரையில் நாணய வர்த்தகம் சுதேச வர்த்தகர்களாலும் அன்னிய தேச வர்த்தகர்களாலும் நடத்தப்பட்டது. அவர்கள் ஸர்ராபு என்று அழைக்கப் பட்டார்கள். 1888 ம் ஆண்டு புது ஓரியன்றல் வங்கி பெர்ஷியாவில ஸ்தாபிக்கப் பட்டது. 1889 ம ஆண்டு பறன் றுட்டரால் "பெர்சிய இம்பீரியல் வங்கி" நான்கு மிலியன் பவுன் முதலோடு ஸ்தாபிக்கப் பட்டது. இதற்கு சாஹ் அவர்களாலும் விக்ரோறியா இராணி அவர்களாலும் தத்துவம் கொடுக்கப் பட்டது. பெர்ஷிய வரசாட்சியிடம "பெர்ஸி போலிஸ்" "ரூஸா" "நஸ்றுத்தீன்" என்ற மூன்று கப்பல்கள் மாத்திரமிருக்கின்றன.

அபுகானிஸ்தான் அமீராயிருந்த சியரலியின் மகன் ஐயூபுகான் என்பவர் மகா பிறித்தானியாவுக்கும் பெர்ஷியாவுக்கு மிடையில் 1884 ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட வுடம்படிக்கைப்படி பெர்ஷியாவில் சிறையில் வைக்கப் பட்டனர். அவருக்கு பிறிட்டிஷிய அரசாட்சியால் 8000 பவுன் வருஷமொன்றுக்குப் பென்ஷன் கொடுக்கப்பட்டது. ஆகிலும் அவர் 1887 ம் ஆண்டு பெர்ஷியாவிலிருந் தோடி விட்டதால் அவரை யோட விட்ட குற்றத்துக்காக பெர்ஷிய புறதேச மந்திரியாயிருந்த யஹ்யா கான் முஷீருத்தவ்லா உத்தியோகத்தால் தள்ளப்பட்டனர். 1887 ம் ஆண்டு சார் ஹென்றி டிறமண்டு வுல்பு என்பவரை பெர்ஷியாவில் பிறிட்டிஷிய தானாதிபதியாய் நியமித்தது பெர்ஷிய துரைத் தனத்தாருக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது. வர்த்தகத்தை விர்த்தி செய்யும்படிக்கும், வழிகள் திறக்கும்படிக்கும் பெர்ஷிய வர்த்தகர்களுக் குண்டாயிருந்த பல தடைகளையகற்றும் படிக்கும் மேற்படி தானாதிபதி கேட்ட கேள்விகளுக்கு சாஹ் அவர்கள் செவிகொடுத்தார்கள். 1889 ம் ஆண்டு ஏப்றல் மாதம் சாஹ் நஸ்றுத்தீன் ஐரோப்பாவுக்கு மூன்றும் முறை சென்றனர். பல விராசாக்களை சந்தித்துவிட்டு இங்கிலாந்தில் ஒருமாதம் தங்கிவிட்டு தமது இராஜதானிக்கு அக்டோபர் மாதம் 20ந் திகதி திரும்பி விட்டனர். அடுத்த வருஷம் பெர்ஷியாவில் புகையிலையில் சுதந்தர வர்த்தகஞ் செய்யு முரித்

து வோர் பிரிட்டீஷிய கம்பனிக்
குக் கொடுக்கப்பட்டது. இந்த வ
ர்த்தகத்துக்கு பெர்சியாவில் உல
மாக்களா லாதரிக்கப்பட்ட எதி
ரிடை யுண்டுபட்டதால் பெர்ஷிய
துரைத்தனத்தார் மேற்படி வுரித்
தை மேற்படி கம்பனியிட மிருந்
து எடுத்துப்போட்டு அதற்கு
5 லட்சம் பவுன் நஷ்டங்கொடுத்
தனர். 1890 ம் ஆண்டு திஹறினி
லிருந்து அஹ்வாஸ் வரையில் வ
ண்டிகள் போகக்கூடிய வோர் வ
ழி திறக்குதற்கு பெர்ஷிய இம்பீரி
யல் வங்கிக்குச் சம்மதங் கொடு
க்கப்பட்டு அதே வருடம் வேலை
துவங்கப்பட்டு 1893 ம் ஆண்டு
முடிக்கப்பட்டது. 1891 ம் ஆண்
டு கேட் கிறீன்பீல்டு என்ற வோ
ர் இங்கிலீஷ் வாலிபப் பெண்ணை
தப்ரீஸில் அவள் தாய்வீட்டிலிரு
ந்து ஓர் குர்தி பலபந்தமாய்க்
கொண்டு போனதால் பெருங் கு
ழப்பமுண்டுபட்டது. அப்பெண்
ணைத் திரும்பக் கொடுக்கும்படி
பெர்ஷிய அரசாட்சியை பிறிட்டீ
ஷிய துரைத்தனத்தார் வேண்டி
க்கொண்டனர். துறுக்கிய பிர
ஜையாகிய மேற்படி குர்தி பெண்
ணைத் திருப்பிக்கொடுக்க அல்ல
த்தட்டியதோடு தானும் இன்
னும் சில கோத்திரத்தவர்களும்
ஓர் தானத்தில் பாளயமிட்டு, அப்
பெண்ணை மீட்சி செய்வதற்குத்
துணியும் பெர்ஷியரைத் தடு
க்க ஆயத்தப்பட்டார்கள். அந்த கு
ர்தியைத் துறுக்கிய துரைத்தன
த்தார் காப்பாற்றியதால் பாரது
ரமான குழப்பம் சம்பவிக்கும்
போல் தோன்றிற்று. ஆகிலும் ஓ
ர் பிறிட்டீஷிய காரியகாரர் போ
ய் மேற்படி பெண்ணைச் சந்தித்
துப்பேசிய பொழுது அவள் த
ன் பிரியப்படியே தனது தாய்
வீட்டி லிருந்து போய்விட்டதா
கவும் தான் மேற்படி குர்தியின்
மனைவியாக இருப்பதாகவும் அ
வருக்குத் தெரிவித்ததால் அந்தக்
காரியம் சீக்கிரம் முடிவு செய்யப்
பட்டது. 1891ம் ஆண்டு சார் பிரு
ன்கு லஸல்ஸ் என்பவர் பெர்ஷி
யாவில் பிறிட்டீஷிய தானாதிபதி
யாக நியமிக்கப்பட்டனர். அடுத்
த வருடம் பெர்ஷியாவில் பேதி
நோய் உண்டுபட்டு அதிக வுயிர்ச்
சேதத்தை யுண்டாக்கிற்று. நா
ளொன்றுக்கு 1000ம் பேர இறந்
தனர். ஆக 28000ம் பேர்கள் அ
ந்நோயால் உயிர் திறந்தனர்.
1893 ம் ஆண்டு றூசியாவுக்கும்
பெர்ஷியாவுக்கும் இடையிலுண்
டான பொருத்தப்படி பிரூஸா
என்ற கிராமம் றூசியாவுக்கும்
ஹிஸார் என்ற கிராமம் பெர்ஷி
யாவுக்கும் கொடுக்கப்பட்டன.
1894 ம ஆண்டு சார் லஸல்ஸ்
பெர்ஷியாவிலிருந்து போய்விட
அவருக்கு பதல் சார மோற்றி
மர் டியூறண்டு பெர்ஷியாவில் பி
றிட்டீஷிய தானாதிபதியாய் ஏற்
படுத்தப்பட்டனர். 1896ம் ஆண்
டு மே மாதம் 1ந் திகதி ஷாஹ் ந
ஸ்றுத்தீன் அவர்கள் திஹறினிலி
ருந்து சில மைல் தூரத்திலுள்ள
சாஹ் அப்துல் ஆஸிம் பள்ளி
வாசலில் வணக்கத்துக்காய்ச் செ
ன்றிருக்கும் பொழுது கொல்லப்
பட்டனர். இன்னும் ஐந்து நாட்
களில் அவர் 50 வருட ஆளுகை
யை முடிக்க விருந்ததால் அவரி
ன் ஜூபிலியைக் கொண்டாடுதற்கு
பெர்ஷிய தேசம் முழுதும் ஆய
த்தம் பண்ணப்பட்டது. அவரை
க்கொன்றவன் மிர்ஸா ரிஸா என்
ற நாமத்தை யுடைய கர்மானிலு
ள்ள வோர் சிறு வர்த்தகன். அவ
ன் சில காலம் இஸ்தம்பூலில் இரு
ந்தனன். அப்பொழுதே அவன்
ஜமாலுத்தீனிட மிருந்து இராஜ
துரோகமான கருத்துகளைப் பெ
ற்றுக் கொண்டான். ஜமாலுத்தீ

ன் ஓர் அபுகானிய செய்கு. அவர் சாஹ் அவர்களால் நன்றாய் ஆதரிக்கப்பட்ட பின்னர் திஹறானில் கலகத்தைப் போதித்து விட்டு ஐரோப்பாவுக்கு ஓடிப்போய் லண்டனைச் சந்தித்து விட்டு ஸ்தம்பூலுக்குப் போய் அங்கு சிலகாலம் தங்கியிருந்தனர். ஜமாலுத்தீன் ஹம்தானிஆள்ளவர். பெர்ஷிய பிரஜைகளி லொருவர். ஷாஹ் அவர்களைக் கொன்ற மிர்ஸா றிஸா தான் மேற்படி செய்கின் காரியகாரனென்றும் அவரின் கட்டளைபபடி கொலைசெய்ததாகவும் சொன்னதால் ஜமாலுத்தீனை யொப்புத்தரும்படி துறுக்கி யரசாட்சியை பெர்ஷியதுரைத்தனம் கேட்டது. இவ்விஷயத்தைக் குறித்து அவ்விரு அரசாட்சிகளுக்கு மிடையில் கடிதங்கள் நீண்டகாலம் எழுதப்பட்டதால் அதற்குள் ஜமாலுத்தீன் நோய்பிடித்திறந்தார். 1896 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம 12 ந் திகதி மிர்ஸா றிஸா தூக்கப்பட்டான். சாஹின் மரணம் அறியப்பட்டபொழுது அத்தேசத்தில் கொஞ்சம் வருத்தமாத்திரமுண்டுபட்டது. இராசதானியிலும் வேறு பட்டணங்களிலும் கிராமங்களிலும் முதன் மந்திரியினதும் தேசாதிபதிகளினதும் முயற்சியால் சமாதானம் நிலைப்படுத்தப்பட்டது. சிறாஸிலும் பாரிஸிலும் கலகங்களுண்டு பட்டு சிலர் கொல்லப்பட்டார்கள். பிரயாணிகள் கொள்ளை யெடுக்கப்பட்டார்கள். இக்கலக நேரத்தில் தமது சாமான்களை யிழந்த ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு பெர்ஷிய துரைத்தனத்தாரால் நஷ்டம் கொடுக்கப்பட்டது. சாஹ் நஸ்றுத்தீனின் இரண்டாம் புத்திரரான முஸபறுத்தீன் அவர்கள் பெர்ஷிய அரசராய் தம் பிதா இறந்தன்றே கொலு வேறினார்கள். தம் பிதா கொல்லப்பட்ட நேரத்தில் அஸர்பைஜான் மாகாணத்தின் கவர்னர் ஜனறலாயிருந்தவரும், தப்ரீஸில் வசித்தவரும், அப்பட்டணத்திலேயே அரசராய் முன் அங்கீகரிக்கப்பட்டவரு மாகிய சாஹ் முஸபறுத்தீன் அவர்கள் பிரிட்டிஷிய தானாதிபதியோடும் றூஷிய தானாதிபதியோடும் திஹறானுக்கு ஜூன் மாதம் 8 ந் திகதி போய்ச் சேர்ந்தார்கள்.

முஸபறுத்தீன் அவர்கள் 1853 ம் ஆண்டு மார்ச் மாதம் 25 ந் திகதி பிறந்தவர்கள். அவர் வாலி அஹத் அல்லது முடிக்குரித்துள்ளவரென்று முன் கூறப்பட்டிருந்தார். ஆகிலும் அவரின்பிதா கொல்லப்பட்டபிறகு இஸ்பஹானில் தேசாதிபதியா யிருந்த அவரின் மூத்த சகோதரர் அவருக் கெதிராய்த் தோன்றக் கூடுமென்ற அச்சம அவருக்குண்டா யிருந்தது. அவர் குர்திகளின் கலக மொன்றை யடக்கத்தவறி விட்டதால் அஸர்பைஜானிலிருந்து திஹறானுக்குத் திரும்பி வரும்படி தம் பிதாவால் கேட்கப் பட்டிருந்தனர். ஆகிலும் சகல எதிரிடையும் அகற்றப்பட்டு முஸபறுத்தீன் 1896 ம் ஆண்டு ஜூன் மாதம் 8 ந் திகதி முடிசூட்டப் பட்டனர். அவர் தமக்கு முடிசூட்டப் பட்டதருணத்தில் சொல்லிய படியே தமது இராச்சியத்தில் ஸிவில் உத்தியோகங்களையும் இராணுவ உத்தியோகங்களையும் வாங்கிக் கொள்ளுகிற வழக்கத்தை யழித்து விட்டதோடு ரொட்டி இறைச்சி ஆகிய தின் சாமான்கள் மீது போடப்பட்டிருந்த வரியை நீக்கி விட்டனர். இந்த வரியே நஸ்றுத்தீன் சாஹ் அவர்களின் ஆளுகையிலுண்டான கலகங்களின் காரணமாயிருந்தது. அவர் 1899 ம் ஆண்டு சப்றம்பர் மாதம் கபோ

னியில் கிறிஸ்தவர்களான ஆர்மீனியர்களுக்கு விரோதவாய் நடந்த கலகத்தை யடக்கிய பொழுது மத வைராக்கிய மில்லாத நற்குணமுள்ள வரசர் என்று காணப்பட்டார். அவர் 1905 ம் ஆண்டு பெரிஸில் நடந்த நூதன பொருட்காட்சியைப் பார்ப்பதற்காக பிரான்சுக்குச் சென்று அங்கிருக்கும பொழுது ஒரு நாள் பியின்கோயிஸ் பெல்லோ என்ற இராஜ துரோகி சாஹ் அவர்களைக் கொல்லத் துணிந்தனன். ஆகிலும் அவர்களுக்குத் தீங்குண்டாகவில்லை. அவர் தமது பிதாவைப் போல் புறதேசங்களில் யாத்திரை செய்யப் பிரியமுள்ளவர். 1900 ம் ஆண்டு ஐரோப்பாவுக்குப் போன பொழுது சாஹ் அவர்கள் ரூசியாவுக்குப் போய் ஸார் அவர்களால் அங்கீகரிக்கப் பட்டார்கள். இரண்டு வருடங்களுக்குப்பின் அவர்கள் திரும்பவும் ஐரோப்பாவுக்குப் போய் இங்கிலாந்து இற்றலி பிரான்ஸ் ரூசியா முதலிய தேசங்களை விஜயஞ் செய்தார்கள். முஸபறுதீன் நேசிகப்பட்த் தக்கவராயிருந்தாலும ரூசியா வலை கடபபதைத தடுத்துக்கொள்ளக் கூடியவரா யிருக்கவில்லை. அவருடைய பிதாவின் காலத்தில் இருக்காத தத்துவம் அவருடைய காலத்தில் அவருடைய தேசத்தில் ரூசியாவுக்குண்டாகி விட்டது. மேற்படி சாஹ் செலவாளியாயிருந்ததால் பைத்துமாலி லிருந்த பொருட்கள் செலவழிந்த பின்னர் ரூசியாவிடம் கடன் வாங்கத் துணிந்தனர். சம்பளங்கள் கொடுக்கப்படாமல் நிலுவையாயின. இந்த நிலைமையைக் கண்ட ஜனங்களும் முல்லாக்களும் அரசருக்கு விரோதமாய்க் கிளம்பி, அரசாட்சியைச் சீர் திருத்தும்படி கேட்டார்கள். சாஹ் அவர்கள் துவக்கத்தில் ஜனங்களின் கேள்விக்குச் செவி கொடாது அவர்களைக் கண்டிக்கத் துணிந்தபொழுது சிலர் பிரிட்டிஷிய தானாதிபதியின் ஸ்தானத்தில் அடைக்கலம புகுந்தனர். ஆகிலும் கடைசியாய் ஜனங்களின் கேள்வி நிறைவேறிற்று. ஓர் இராச்சிய சங்கம் அல்லது பார்லிமேந்து ஸ்தாபிக்கப் பட்டது. ஆகிலும் "மயிற் கொலு" விலிருந்து இராச்சிய சங்கத்துக்குக் கீழாய்த் தேசத்தை யாளுதற்கு முஸபறுத்தீன் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவருக்கு 1903 ம் ஆண்டு நைற்—ஒப்—காற்றர் என்னும் பட்டம் பிரிட்டிஷிய அரசால் கொடுக்கப் பட்டது. அவர்கள் 1907 ம ஆண்டு ஜனவரி மாதம் 8ந் திகதி மவுத்தான பின்னரே அவர்களின் சிரேஷ்ட புதல்வரான முகம்மது அலி மிர்ஸா அவர்கள் பட்டஞ் சூட்டப் பட்டார்கள்.

## உஸ்மான் பாஷா.

துறுக்கிய பீல்டு மார்ஷல் முஷீர் உஸ்மான் பாஷா அவர்கள் 1832ம் ஆண்டு ஆசியா மைனரில் தோகாற் என்னும் பட்டணத்தில் பிறந்தார்கள். அவர்கள் இஸ்தம்பூலி லுள்ள இராணுவ கலலூரியில் கற்றுத் தேறிய பின்பு 1853 ம் ஆண்டு துறுக்கிய குதிரைப் படையிற் சேர்ந்து உமறு பாஷாவின் கீழ் ரூசிய யுத்தத்தில் (1853—56) வலேச்சியாவிலும் கிறிமியாவிலும் சேவித்தார்கள். இம்பீரியல் கார்டில் ஓர் கெப்றனுய் ஏற்படுத்தப்பட்டு அவர் 1860 ம் ஆண்டு லபனானிலும் 1867 துவக்கம் 1869 வரையில் கிறீட்டிலும் முஸ்தபா பாஷாவின் கீழ் நடந்த யுத்தங்களிற் சேர்ந்திருந்து, ஹாஜியா ஜோர

ர்ஜியா என்ற தலத்தைப் பிடித்ததற்காய்க கீர்த்தியோடு லப்டினன்று கர்னல உத்தியோகத்துக்கு வுயர்த்தப் பட்டனர். 1871 ம் ஆண்டு யமன் கலகத்தை றதீப பாஷா அடக்கும்பொழுது அவரின் கிழ் உஸ்மான் பாஷா சேவித்தனர். 1874 ம் ஆண்டு மேஜர் ஜனறலாகவும் 1875 ம் ஆண்டு ஜனறலாகவும் உயர்த்தப் பட்டனர். ஸெர்வியாவுக்கும் துருக்கிக்கும் இடையில் யுத்தமுண்டானபொழுது விதினில் 1876 ம ஆண்டு அவர் ஓர் சேனை வகுப்பின் அதிகாரியாய் நியமிக்கப்பட்டு ஸயிற் சார் என்றவிடத்திலும் யாவர் என்ற விடத்திலும ஸர்விய சேனாதிபதி கொனிபை ஜூலை மாதத்தில் தோல்வியாக்கி விட்டு ஸர்வியாவுக்குப் படையெடுத்துச் சென்று அலக்ஸின்றல் டலிகிருட் என்ற தலங்களை அக்டோபர் மாதத்தில் பிடித்துக் கொண்டனர். அதனோடு அந்த யுத்தம் முடிந்து விட்டது. உஸ்மான் பாஷா முஷீராய் நியமிக்கப்பட்டு வீதினில் சேனைவகுப்பின் அதிகாரியாய் இருந்தனர். 1877 ம ஆண்டு ஜூலை மாதம் ருஷியர் டன்யூபைக் கடந்த பொழுது உஸ்மான் பாஷா தமது சேனையைப் பிலிவ்னாவுக்குக் கொண்டுவந்து, தமது என்ஜினீரான தவுபீக்கு பாஷாவின் துணையைக் கொண்டு ருஷியரின் வழிக்கு வலப்பக்கத்தில் பாளைய மிட்டுப்படிப் படியாய்த் தமது ஸ்தானத்தைப் பலப்படுத்திக் கொண்டனர். அவரை ருஷியர்கள் ஜூலை மாதம் 20 ந் திகதியிலும் 30 ந் திகதியிலும் சப்றம்பர் மாதம் 11 ந் திகதியிலும் தாக்கிய பொழுது அவர்களை அதிகமான சேதத்தோடு தோல்வியாக்கினர். அம் மூன்று யுத்தங்களிலும் 30,000 ருஷியர் சேதமடைந்தனர். அவர் ருஷியரால் நெருக்கமாய் வளையப்பட்டிருந்தும் டிஸம்பர் மாதம் 9 ந் திகதி வரையில் அந்தத் தானத்தைப் பிடித்துக் கொண்டிருந்தனர். ஆகிலும் அவர் நிஷிலலாமையே காரணமாய்ப் பலபந்தமாக வெளியே செல்லும் பொழுது காயப்பட்டதால் தம்மைத்தாமே ருஷியருக் கொப்புக்கொடுத்தனர். இவ்வாறு உஸ்மான் பாஷா பிலிவ்னாவை காத்துக்கொண்டது ருஷியரின் முன்னேறுதலை ஐந்து மாதம் தாமதப்படுத்திற்று. ஆதலால் ருஷியா மூன்றுவது பிலிவ்னா யுத்தத்தின்பின்னர் கடினமான குளிர்காலத்தில் பால்கன் மலையைத் தாண்டவேண்டியதாயிற்று. மாட்சிமை தங்கிய சுல்தான் அவர்கள் பிறிவியன்றில் செய்யப்பட்ட உதுமானிய கீர்த்தி முத்திரையை உஸ்மான் பாஷாவுக்குக் கொடுத்ததோடு; அவருக்கு காஸீ பட்டத்தையும் கொடுத்து அவர் ருஷியாவில் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பொழுது அவரை இம்பீரியல் கார்டு பட்டாளத்தின் தளகர்த்தராகவும், பீரங்கிப்படையின் தலைவராகவும், மாளிகையின் காரியஸ்தராயும் நியமித்தார்கள். அவர் 1878 ம் ஆண்டு டிசம்பர் மாதம் யுத்த மந்திரியாகி அது முதல் 1885 ம் ஆண்டு வரையில் (இடையில் சொற்ப காலத்தைத் தவிர) அவ் வுத்தியோகத்தைப் பார்த்து வந்தனர். அவர் இஸ்தம்பூலில் தமக்கு சுல்தான் அவர்கள் யில்டிஸ் கயஸ்குக் கயலில் கட்டிக் கொடுத்த மாளிகையில் 1900 ம் ஆண்டு ஏப்றல் மாதம் 4 ந் திகதி மவுத்தாகி மிக்க ஆடம்பரங்களோடு சுல்தான் முகம்மது பள்ளிவாசலில் அடக்கம் பண்ணப் பட்டனர்.

## அறபிராச்சிய சரித்திர சுருக்கம்.

(தொடர்ச்சி)

ஹீரு குடிஜனங்களின் முன் மாதிரியைப்பின்பற்றி தெஹ்றகான்கள் அல்லது கல்டியாவிலிருந்த ஆஸ்திக்காரர்கள் வழிப்பட்டார்கள். அவர்களிடம் நிலவரி பெடுத்துக் கொண்டு அவர்களின் சொத்துகளை யவர்களுக்கே முஸ்லீம்கள் கொடுத்து விட்டனர். அவர்கள் நாட்டவர்களுள் குறுக்கிடாது அவர்கள் தங்கள் வேளாண்மைகளையும் நிலங்களையும் காமானத்தோடு அனுபோகம் செய்தற்கிடங் கொடுத்தனர். ஹீருவை முஸ்லீம்கள் பிடித்துக்கொண்டது பெர்ஷிய துரைத்தனத்தின் கண்களுக்கு ஆபத்தின் பாரதூரத்தைக் காட்டிற்று. ஓர் இழமையான வளர்கின்ற சாதி இராச்சியவிருப்பத்தோடும் வேத உற்சாகத்தோடும் பெர்ஷியாவின் வாயலில் குந்திக்கொண்டிருந்தது. பெர்ஷியர் யூகமுள்ளவர்களாயிருப்பின் தமது உள்நாட்டிலுள்ள அரண்களைப்பலப்படுத்திக் கொள்வதோடு உட்பகைகளால் பிளக்கப்பட்டிருந்த தமது தேசத்தைச் சீர்படுத்திக் கொள்வார்கள். அவர்கள் அறபிகளோடு சமாதானம் முடித்துக்கொள்ளவும் கூடியவர்களாயிருந்தனர். அப்பொழுது பெர்ஷிய விராச்சியம் ஐசுவரியமும் தத்துவமுமுள்ளதாயிருந்தது. அதற்குள் தற்கால பெர்ஷியாவும பக்தீரியாவும், தார்தரிவரையிலும் இந்தியாவரையிலும் மத்திய ஆசியாவிலிருந்த சர்வ சிறு மாகாணங்களும் இருக்கும் மெஸோபெற்றேமியாவும் அடங்கியிருந்தன. கல்டியாவிலிருந்து அறபிகளைத் துரத்துதற்காகவோர் பெருஞ்சேனை யனுப்பப்பட்டது. அப்பொழுது கலீபா அபூபக்கர் றளியல்லாகு அன்கு அவர்கள் காலிது றளியல்லாகு அன்குவை அரைவாசி இராணுவத்தோடு சாமுக்கு அனுப்பினார்கள். மற்றைய சேனாதிபதியான முதன்னா அவர்கள் சொற்ப சேனையோடு பெர்ஷிய கூட்டத்தை யெதிர்க்க தனிமையாய் விட்டு விடப்பட்டிருந்தனர். அவர் தமது காவலர்களைப் பின்வாங்கச் செய்து விட்டுத் துணைச் சேனை கேட்பதற்காக மதீனாவுக்குத் தீவிரமாய் வந்தார். ஆகிலும் அவர் அங்கு வந்து சேரும்பொழுது கலீபா அவர்கள் மரணிக்கிறவர்களாக விருந்தார்கள்.

அபூபக்கர் றழியல்லாகு அன்கு அவர்கள் இரண்டரை வருடம் ஆளுகை செய்து விட்டு ஹிஜறத்து 13 ம ஆண்டு ஜமாதுல் ஆகிறு மாதம் 22 ந் திகதி மவுத்தானார்கள். அவர்கள் தெளிவான முகநிறமும மென்மையான முகமும் மெலிந்த தேகமும் உடையவர்களென்றும் கூன் உள்ளவர்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் நபி சலல்லாகு அலைகிவசல்லம அவர்களின் சிஷராகமுன் குறைஷிகளுக்கிடையில் ஓர் பிரதான நியாயாதிபதியாயிருந்து அவர்கள் மீது அதிகாரஞ் செலுத்துகிறவராயிருந்தார்கள். அவர்கள் வர்த்தகராயிருந்ததால் அவர்களின் செல்வமும, ஓர் தலைவராய் இருந்ததால் அவர்களின் யூகமும் மக்கத்தார்களுக்கிடையில் அவர்களைப் பிரதான முள்ளவோர் மனிதராக்கி விட்டன. தமது எஜமானைப் போலவே அபூபக்கர் இயல்பான வழக்கங்களுடையவர்கள். சாதுவான வர்கள். ஆகிலும் திடமான வர்கள். பு

திதாய் உற்பத்தியான இராச்சியத்தைப் பராபரிப்பதற்கும் ஜனங்களின் நன்மைக்கும் தங்கள் முயற்சி முழுவதையும் செலுத்திவந்தார்கள். அவர்கள் இரவுகாலத்தில் வெளிப்பட்டுத் துன்பப்படுபவர்களுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் துணை புரிந்தார்கள். அவர்கள் கலீபாவாக தெரியப்பட்ட பின்பு கொஞ்சங்காலமாக தமது சொந்த வருமானத்தைக் கொண்டே தம்மைத் தாபரிந்துவந்தார்கள். ஆகிலும் அவர்கள் தமது ஆஸ்தியையும் வியாபாரத்தையும பராபரிப்பதில் இராச்சிய விஷயங்களுக்குப் போதிய கவனஞ் செலுத்தக்கூடாதென்பதைக் கண்ட பொழுது பொக்கிஷ சாலையிலிருந்து வருடத்துக்கு 6000 திறஹம் எடுத்துக்கொள்ளுதற்குச் சம்மதித்தார்கள். என்றாலும் அவர்கள் மரணப் படுக்கையில் இருந்த பொழுது தாம் பொதுப்பணத்தை யெடுத்ததற்காய் வருத்தமடைந்து தமது ஆஸ்திகளில் ஒன்றை விற்று தாம் எடுத்த பணத்தை அரசாட்சிக்குத் திரும்பக் கொடுக்கும்படி கற்பித்தார்கள். இவ்வாறே றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் சமீபமான தோழர்களின் நெறிகள் உண்மையான சாதுவானவைகளாயிருந்தன. மவுத்தாக முன் அபூபக்கர் அவர்கள் உமறு றளியல்லாகு அன்கு அவர்களைத் தமக்குப் பின் கலீபாவாக நியமித்தார்கள். இவர்களின் நியமனம் ஜனங்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

### உமறு.

உமறு அவர்கள் கலீபா வானது இஸ்லாத்துக்கு மிக்க பிரயோசனத்தைக் கொடுத்தது. அவர்கள் கடினமான சன்மார்க்க நடக்கையுடையவர்கள், நீதியை யுவந்தவர்கள், அதிக முயற்சியும் குணவலிமையுமுள்ளவர்கள். அவர்கள் அறபுத் தேசத்தின் உள் நாட்டு ஆளுகையைச் சீர்படுத்திய பின்பு செய்த முதற்காரியம் முதன்னா அவர்களுக்குத் துணைச்சேனையனுப்பத் தீவிரப்பட்டதே. இந்தச் சேனை அபூ உபைது அவர்களின் அதிகாரத்தின் கீழிருந்தது. யுத்தகளத்திற் சேர்ந்தவுடன் அபூ உபைது சிரேஷ்ட சேனாதிபதியாயினர். அவர்கள் முதன்னாவின் புத்தியைக் கேளாது தாம் படை வகுப்பு நிலையை மாற்றக் கூடாத வோர்தானத்தில் பெர்ஷியர்களோடு யுத்தஞ் செய்து தோல்வியடைந்ததோடு தாமும்* கொல்லப்பட்டார்கள், ஆகிலும் பெர்ஷியர் தங்களுக்குண்டான வெற்றியைத் தொடர்ந்து செல்லாதிருந்ததால் முதன்னா அவர்கள் முன்னேறி புறாத்து நதியின் மேற்குக் கரையிலுள்ள புவாயிப் என்ற தலத்தில் பெர்ஷியரை அதிக சேதத்தோடு தோல்வி யாக்கினார்கள். முதன்னா திரும்பவும் தேசத்தைப் பிடித்துக்கொண்டு ஹீறு பட்டணத்துக்குள் திரும்பவும் புகுந்தனர். அக்காலத்தில் ஓர் புது அரசர் பெர்ஷிய சிங்காசனத்தில் ஏறியிருந்தனர். யெஸ்ஜர்து என்ற நாமத்தைப் பெற்ற வாலிபரும் முயற்சியும் பேராசையுமுள்ளவருமான அவ்வரசர் அறபிகளை ஹீறுவிலிருந்து துரத்திவிட மாத்திரமல்ல அவர்களுடைய தேசத்தைப் பிடித்துக் கொள்ளவும் தீர்மானித்தனர். இந்நோக்கத்தோடு அவர் கல்டியாவுக்கு ஒரு லட்சம் ஜனங்களைக் கொண்ட வோர் சேனையை அனுப்பி வைத்தனர். அச்சேனை தென்பாகமாய்ச் சென்று முஸ்லிம்களை அவர்களின் தானங்களிலிரு

ந்து துரத்தத் துணிந்தது. அறபிகள் முதன்னாவின் கீழ் மேற்படி பயங்கரமான சேனையோடெதிர்க்க வியலாமல் கல்டியாவைத் திரும்பவும் விட்டு விட்டு வனத்தின் எல்லை வரையில் பின் வாங்கி மதீனாவிலிருந்து துணைப் படை வருமளவும் அங்கு காத்திருந்தார்கள். முஸ்லிம்கள இவ்வாறு காத்திருக்கையில் அவர்களின் பெரிய சேனாதிபதியான முதன்னாவுக்கு கல்டிய காய்ச்ச லுண்டுபட்டு அவர் உயிர்திறந்தனர். பின்பு கலீபா அவர்களால் அனுப்பப்பட்ட துணைப் படையைக் கொண்டுவந்த வக்காஸின் புதல்வர் ஸாது அவர்கள் முழு அறபிச் சேனையின் அதிபதியாயினர். அச்சேனையில் அப்பொழுது 30,000 பேர்ளிருந்தார்கள். அதன்பின் உண்டுபட்ட யுத்தம்கடினமாயெதிர்க்கப்பட்டது. மூன்று நாள் யுத்தம் நடந்தது. இருபகுதிகளிலும் வீரச்செய்கைகள் நிகழ்ந்தன. மூன்றாம் நாளில் பெர்ஷிய சேனை முறிய அடிக்கப் பட்டது. பெர்ஷியர் கடுஞ் சேதத்தோடு தோல்வியாக்கப்பட்டு அவர்களின் தலைவரும் கொல்லப் பட்டதால் அவர்கள் வடபக்கமாய் ஓடினார்கள். கொடேசியா என்றதலத்தில் நடந்தமேற்படி யுத்தம் கல்டியாவினதும் மிஸோபெற்றேமியாவினதும் விதிவசத்தைக் காரியத்தில் தீர்மானித்துவிட்டது. ஹீறு திரும்பவும் எதிர்ப்பின்றி பிடிக்கப் பட்டது. ஹீறு பட்டணத்தவர்கள் முதன்னா வோடு செய்து கொண்ட உடன்படிக்கைகளைக் கிழித்து விட்டதற்காக அதிகமான வரியைக் கொண்டு ஆக்கினை செய்யப்பட்டார்கள். மேற்படி யுத்தம் 636 ம் ஆண்டு (கி. பி.) பெப்ருவரி மாதம் நடைபெற்றது.

ஹீறுவுக்குச் சமீபத்திலிருந்த பட்டணங்களும் கிராமங்களும் கீழ்ப்பட்ட பின்னர் ஸாது பாபில் (பாபிலன்) பட்டணத்துக்குத் திரும்பினர். அங்கு தோல்வியடைந்த பெர்ஷிய சேனையில் மிஞ்சியவர்கள் பிறுஸான், ஹுர்முஸான், மிஹ்றுன் ஆகியவர்களின் கீழ் கூடியிருந்தார்கள். அங்கும் அவர்கள் தோல்வியாக்கப்பட்டுத் துரத்தப்பட்டார்கள். மிஹ்றுன் பெர்ஷிய விராஜதானியானமதாயினுக்குவோடிவிட்டனர். ஹுர்முஸான் பெர்ஷிய மலைத்தொடருக்கப்பாலுள்ள அஹ்வாசுக் கோடிவிட்டனர் பிறுஸான் பெர்சிய வரசரின் பொக்கிஷங்கள் வைக்கப் பட்டிருந்த நிஹாவந்துக்குவோடிவிட்டனர். மிஹ்றுன் ஓர் பெரிய பெர்ஷிய சேனையோடு பாளயமிட்டிருந்த மதாயின் அதிகாரமுடையதாயிருக்குங் காலமெல்லாம கல்டியாவை அறபிகள் நித்தியகாலம் பிடித்திருப்பது கூடாத காரியமாயிருந்தது. ஆதலால் மேற்படி இராஜதானிக் கெதிராய் படையெடுத்துச் செல்வது ஸாதுக்குக் கடமையாகிவிட்டது. மன்சூர் அரசரால் அமைக்கப் பட்ட பகுதாதைப் போல் மதாயின் திஜ்லா ஆற்றின் இருபக்கங்களில் பதினைந்து மைலுக்குயரே கட்டப்பட்டிருந்தது. அதன் மேற்குப் பாகம் ஸிலூசியா என்றழைக்கப்பட்டது. இது இஸ்கந்தர் அரசரின் பெரிய சேனாதிபதியின் சந்ததியாரான ஸிலூசிதயரால் அமைக்கப்பட்டது. அதன் கிழக்குப் பாகம் ஸஸீபன் என்றழைக்கப்பட்டது. இது பெர்ஷிய அரசர்களால் அமைக்கப் பட்டது. அவ்விரண்டும் மதாயின் (இருபட்டணங்கள்) என்று அழைக்கப்பட்டன. அங்கிருந்த அரசர்களினதும் மேன்

மக்களினதும் மாளிகைகள் அழகும் பெருவாழ்வு முள்ளவைகளாயிருந்தன. முதல் முறை கண்டவுடன் சாதுவான அறபிகளின் மனத்தில் அவை பதிவாகிவிட்டன. சில காலம் முற்றுகையிடப்பட்ட பின்னர் மதாயின் அறபிகளால் பிடிக்கப்பட்டது. அதனோடு திஜ்லா ஆற்றுக்கு மேற்கேயுள்ள தேசம் முழுதும் அறபிகளுக்குக் கீழ்ப்பட்டது. அல்லாகுத்த ஆலாவுக்கு தோத்திரஞ் செலுத்தும் வணக்கம் (ஸலாதுள்ளபர்) கொஸ்றாஸ் அரசர்களின் மாளிகையில் அறபிகளால் நடத்தப்பட்டது.

இப்பொழுது இருக்கு மிஸொபெற்றேமியா ஆகிய தேசங்களின் ஸிவில் தலைவராகவும் இராணுவ தலைவராகவும் ஆகிவிட்ட ஸாது அவர்கள் மதாயினை தமக்கு ஹெட் குவாட்டர் ஆக்கிக்கொண்டார்கள். இராச மாளிகையில் வசித்தாகள். உத்தியோகத்தர்களின் ஆபிஸ்கள் அங்கு இஸ்தாபிக்கப் பட்டன. மாளிகையின் பெரியசிறப்பான சாலையில் வெள்ளிக்கிழமைகளில் குத்துபா நடத்தப்பட்டது. மாளிகையிலிருந்தே ஸாது அவர்கள் மாகாணத்தின் அரசாட்சியை நடத்தினார்கள். ஆயினும் சுறுக்கில் இன்னுமொரு யுத்தம் நடத்த வேண்டியதாயிற்று. மலைகளுக்கு மேற்கே ஹொல்வானிலிருந்த பெர்ஷிய அரசர் மதாயினைத் திரும்பப் பிடிப்பதற்கு ஓர் பெருஞ் சேனையை யனுப்பிவைத்தனர். இந்தச் சேனையை அறபிகள் மேற்படி இராஜதானிக்கு வடகிழக்கே ஐம்பது மைலுக்கப்பாலிருந்த ஜலூலா என்ற தலத்தில் சந்தித்து யுத்தஞ் செய்து பெருஞ் சேதத்தோடு தோல்வியாக்கினார்கள். ஹொல்வானும் பிடிக்கப்பட்டு பலமாய் அரணிக்கப்பட்டது. ஜலூலாவிலும் மதாயினிலும் எடுக்கப்பட்ட கொள்ளைப் பொருட்கள் மதீனாவுக்குக் கொண்டுவரப்பட்ட பொழுது கலீபா அவர்கள் அழுதார்கள். அதன் காரணம் கேட்கப்பட்டபொழுது தமது ஜனங்கள் வருங்காலத்தில் மோசம்போவதைத் தாம் அந்தப் பொருட்களிலேயே காண்பதாக உமறு அவர்கள் கூறினார்கள். அவர்கள் சொல்லியது பிழையாயிருக்கவில்லை. துவக்கத்தில் அறபிகளின் வெற்றிகளின் காரணங்களாயிருந்த கட்டுப்பாடு கண்டிதம், ஆத்மத்தியாகம் ஆகிய குணங்களை அறபிகள் கடைசியிலிழப்பதற்கு அவர்களடைந்த என்றுங்காணாத வெற்றிகளே காரணமாயிருந்தன.

ஹொல்வான்* பிடிக்கப்பட்டபின்பு பெர்ஷியவரசரோடு வோர் சமாதான வுடம்படிக்கை முடிக்கப்பட்டது. அதைக்கொண்டு பெர்ஷிய விராச்சியத்துக்கும் அறபிராச்சியத்துக்கும் மத்தியில் பெர்ஷிய மலைத்தொடரை எல்லையாக்கப்பட்டது. அந்த எல்லைக்கப்பால் போகவேண்டாமென்று அறபிகளுக்கு கலீபா அவர்கள் கட்டளை யனுப்பினார்கள். பெர்ஷிய குடாவின் சிரசிலுள்ள தேசம் கிழக்குப் பகுதியிலுள்ள மலைத்தொடர் வரையில் ஏற்கனவே கீழ்ப்படுத்தப் பட்டிருந்தது. ஓபல்லா துறைமுகம் முஸ்லிம்களால் பிடிக்கப்பட்டது, மேற்படி மாகாணத்தைச் சீர்ப்படுத்தவும் அதன் சகாயங்களை வெளிப்படுத்தவும் முஸ்லிம்களெடுத்த முயற்சி நீதியும் யூகமும் உள்ள அரசரான உமறு அவர்களின் சாமார்த்தியத்தையும் அவர்களுக்குத் துணைபுரிந்த சங்கத்தின் திறமையையும் காட்டிவிட்டது. மேற்படி மாகாணம் அளக்கப்பட்டது. ஓர் புது

ஒழுங்கான வரி நியமிக்கப்பட்டது. நாட்டவர்களின் சுமை குறைக்கப்பட்டது. அவர்களின் நிலங்கள் அவர்களுக்குப் பலப்படுத்தப்பட்டன. நிலக்காரர்கள் மீது பெர்ஷியஅரசரால் சுமத்தப்பட்டிருந்த வரிகள் திருத்தப்பட்டன. வேளாண்மைகளுக்கு நீர்பாய்ச்சுதற்காய் வாய்க்கால்கள் வெட்டப்பட்டன. வேளாண்மைக்காரர்களுக்குத் தேவையான வேலைகளில் முற்பணங்கள் கொடுக்கும்படி கட்டளை கொடுக்கப்பட்டது. சுதேச நாட்டவர்கள் அகற்றப்படுவதைத் தடுத்துக்கொள்வதற்காய் நிலங்களை விற்கக்கூடாதென கட்டளை கொடுக்கப்பட்டது. பெர்ஷிய அரசர்களின் முடிக்குரிய நிலங்களும், அவர்கள் வேட்டையாடுகிற காடுகளும், ஓடிப்போன இளவரசர்களாலும் நிலக்காரர்களாலும் விட்டுவிடப்பட்ட நிலங்களும் ஓடிப்போன குருமார்களால் விட்டு விடப்பட்ட அக்கினியாலயங்களைச் சேர்ந்த நிலங்களும் அரசாட்சியின் சொத்தாகி மதீனாவிலிருந்து நியமிக்கப்பட்ட காரியகாரர்களால் பராபரிக்கப்பட்டன. மேற்படி நிலங்களையும் ஸவாது என்றழைக்கப்பட்ட கல்டியாவின் வெளிகளையும் யுத்த கொள்ளைப் பொருட்களாய்த் தங்களுக்குக் கொடுக்கும்படி சேனையிலுள்ளவர்கள் கூக்குரலிட்டனர். ஆகிலும் கலீபா அவர்கள் அலி றளியல்லாகு அன்கு இபூனு அப்பாஸ் றளியல்லாகு அன்கு ஆகியவர்களின் கருத்துக்கிணங்கிப்போர்வீரர்களின் மேற்படி கேள்விக்கு இடங் கொடாதிருந்தார்கள். அரசாட்சியின் சொத்திலிருந்து வந்த வருமானத்தில் அரசாட்சியின் செலவுகள் போக பாக்கியுள்ளது அங்கு குடியேறிய அறபிகளுக்குக் கொடுக்கப்பட்டது.

ஆகிலும் கலீபா அவர்களின் புத்தியாவது அவர்களின் சேனாதிபதிகளின் அடக்கமாவது பெர்ஷியரோடு திரும்பவும் யுத்தமுண்டாகிறதைத் தடுத்துக் கொள்ள வில்லை. யெஸ்தெஜர்து அரசர் தமது இராஜதானியையும் இரண்டு தக்க மாகாணங்களையும் இழந்ததற்காய்க் கோப மூட்டப்பட்டிருந்தனர். அவரின் தேசாதிபதிகள் அமையாதிருந்தார்கள். அறபிகளுக்கெதிராய்த் திரும்பவும் முன்னேற அவரின் சேனை கூக்குரலிட்டது. அஹ்வாஸின் தேசாதிபதியான ஹுர்முஸான் குடியேறிய அறபிகளைத் திரும்பத் திரும்பத் தாக்கினர். அவர் தோல்வியாக்கப்பட்ட பொழுது சமாதானம் பேசுகிறவராயும் தருணங் கிடைத்த பொழுது அதை முறிக்கிறவராயும் இருந்தனர். இந்தக் காலத்தில் இறுக்கில் இரு புதுப் பட்டணங்கள் கட்டப் பட்டன. சதல் அறபில் அமைக்கப்பட்டு வடதேச அறபிகள் குடியிருந்த பஸறா ஓபாலாவுக்கு பதல் இறுக்கின் துறை முகமாகி விட்டது. புறாத்து நதியின் மேற்குக் கரையில ஹீறாவுக்கு மூன்று மைலுக்குத் தெற்கே அமைக்கப்பட்ட கூபாவில யமன் அறபிகள் வசித்த தோடு அப்பட்டணம் மதாயினுக்குப் பகரமாகிவிட்டது. மதாயின் வியாதியுள்ள பட்டண மாதலின் விட்டு விடப்பட்டது. பஸறா கூபா ஆகிய இருபட்டணங்களும் ஒழுங்காயமைக்கப்பட்டன. பிரதான பள்ளிவாசலையும் தேசாதிபதியின் வீட்டையும் மத்தியில் வைத்து ஓர் சதுரம் அமைக்கப் பட்டது. வழிகள் நேராயும் அகலமாயும் விஸ்தாரமாயும் இருந்தன. கடைகள் வசதியாயும நந்தவனங்கள் பலவாயும் இருந்தன.

கடைசியாக பெர்ஷியர்கள் ஓயாமல் கொள்ளை யெடுப்பதற்கு வருவதைச் சகிக்க முடியாமலும், வடபக்கத்தில் ஓர் பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டிருந்த பெர்ஷிய அரசர் தங்களைத் தாக்கக் கூடுமெனறஞ்சியும் மிசோபெற்றேமியாவிலிருந்த அறபிகள் கலீபாவிடம் ஓர் தானாபத்தியத்தை யனுப்பி மேற்படி அபாயத்தைத் தடுக்க வுத்தரவு கேட்டனா. பெர்ஷியர் காலத்துக்குக் காலம் எழும்புகிறதைக் குறித்து கலீபா அவர்கள் மேற்படி தானாபதத்தியத்திடம்விசாரித்தார்கள். "முஸ்லீம்கள் திம்மிகளுக்கு (முஸ்லிமல்லாத பிரஜைகளுக்கு) தீங்கு செய்து அதனால் இவர்கள் முஸ்லிம்களுக்கெதிராய்க் கலகம் செய்கிறதாயிருக்கலாம" என்று கலீபா கூறினார்கள். இதற்குத்தரமாய் "நாங்கள் அவாகளை யுண்மையோடும் நல்லெண்ணத் தோடுமே பாவித்து வருகிறோம்" என்று தானாதிபதிகள் கூறினார்கள். "அது எப்படி இருக்கலாம். அவர்களுள் ஒரு உண்மையான மனிதனாவ தில்லையா" என்று கலீபா விசாரிததனர். "அமீருல் மூமினீனே எங்கள் எல்லைகளைப் பெருப்பிக்க வேண்டாமென்று தாங்கள் கட்டளை யிட்டிருக் கின்றீர்கள். அவர்களுடைய அரசர் அவர்களுக் கிடையில் இருந்து கொண்டு அவர்களைத் தூண்டி விடுகிறார். இரண்டு அரசர்கள் ஒன்றாயிருக்கக கூடாது. ஒருவர் மற்றவரைத் துரத்தவேண்டும். நாஙகள் அவர்களைத் கடினமாய் நடத்தவில்லை. அவர்களின் அரசரே அந்த ஜனங்களை அவர்கள் எங்களுக்குக்கீழ்ப் படிந்த பின்னும எங்களுககெதிராய்க் கிளம்பும்படி தூண்டிவிடுகின்றார். தாங்கள் தடையை நீக்கி விட்டு நாங்கள் முன்னேறி அவர்களின் அரசரைத் துரத்திவிட உத்தரவு தரும் வரையில் மேற்படி காரியம் நடத்து கொண்டே யிருக்கும். அது வரையில் அவர்களின் ஆசைகளும் தந்திரங்களும் ஒழியா" என்று தானாதிபதிகள் உத்தரங்கூறினார்கள். அந் நேரத்தில் முன்குறிக்கப் பட்ட பெர்ஷிய தலைவரான ஹர்முஸான் பிடிக்கப்பட்டு மதீனாவுக்கு மறியற் காரனாய்க் கொண்டுவரப் பட்டு இஸ்லா மார்க்கத்தை யனுசரித் திருந்தனர். அவரும் மேற்படி தானாதிபதிகளின் கருத்தைப் பலப்படுத்திப்பேசினார். அப்பொழுது கிழக்குப் பக்கமாய் முன்னேறுவதற் கெதிராய் முஸ்லிம்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த கட்டளையை எடுத்துப் போடுவதே நல்லதென்று உமறு அவர்களுக்குத் தோன்றிற்று. தற்காப்புக் காக கொஸ்ரூஸ் அரசரை நசிக்கி விட்டு அவரின் இராச்சியத்தை முற்றாய்ப் பிடித்துக் கொள்வது ஆவசியகமாயிருந்தது. வனத்திலிருந்து வந்து உருமையின்றித் தம் தேசத்திற் புகுந்து தம்மைத் தமது இராஜதானியிலிருந்து துரத்திவிட்டுத் தம்முடைய சில அழகிய மாகாணங்களைப் பிடித்துக் கொண்டவர்களைக் கடைசியாய் முறியவடிக்க பெர்சியரை அவர்களின் அரசர் அழைத்தபொழுது அவர்கள் உற்சாகத்தோடு மறுமொழி கொடுத்தார்கள். இந்த கடைசியான யுத்தத்திற்கு யெஸ்ஜர்து சேர்த்த சேனை அதற்கு முன் அவராற் சேர்க்கப்பட்ட சேனைகளைப்பார்க்கிலும பெரிதானது. பெர்ஷியரின் ஆயத்தங்களைப்பற்றிய சமாசாரம் மதீனாவில் பெருமெழுச்சியை யுண்டாக்கிற்று. கலீபா அவர்கள் துணைப்படைகளை யெல்லைக்கனுப்பி வைத்தார்கள். தெற்கில் பெர்ஷிய கொள்

ளைக்காரர்களோடு யுத்தஞ்செய்து கொண்டிருந்த சேனாதிபதியான நுமான் அவர்கள் அறபிச் சேனைகளின் தளகர்த்தராய் ஏற்படுத்தப்பட்டார்கள். நிஹாவந்தில் அல்பர்ஸ் மலையடிவாரத்தில் யுத்தம் நடந்தது. அவ் யுத்தம் ஆசியாவின் விதிவசத்தைத் தீர்மானித்ததோடு "வெற்றிகளின் வெற்றி" யென்று அழைக்கவும் படுகின்றது. அதில் அறபிய சேனாதிபதி கொல்லப்பட்டார். அறபிகளைப்பார்க்கிலும் ஒன்றுக் காறு வீதம் அதிகமாயிருந்த பெர்ஷியர்கள் கடுஞ் சேததோடு தோல்வியாக்கப் பட்டார்கள். அவர்களின் அரசர் ஊருக்கூரோடிக் கடைசியாக ஓர் தூரமாகாணத்தில தமது ஜனங்களு ளொருவனாற் கொல்லப்பட்டார். இவ்வாறே பெர்ஷியா முஸ்லிம் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டது. மிஸொபொற்றேமியாவிற் போலவே பெர்ஷியாவிலும் வேளாண்மைக்காரர்களான நாட்டவர்களைத் தங்கள் நிலங்களில் பத்திரமாய்க் குடியிருதத கலீபா அவர்கள் முயற்சித்தார்கள். நாட்டவர்கள் பெரும் நிலக்காரர்களின் கொடுமையிலிருந்து விடுதலையாக்கப் பட்டார்கள். அவர்களின் வரிகள் திருத்தப்பட்டன. உடைந்த வாய்க்கால்கள் செப்பனிடப்பட்டன. புது வாய்க்கால்கள் கட்டப்பட்டன. நிலக்காரர்கள் தங்கள் நிலங்களை வைத்துக் கொண்டு திட்டமான வரி கொடுத்து வந்தார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் மனசாட்சிப் படி நடக்குதற் கிடங் கொடுக்கப்பட்டது. பழைய மார்க்கத்தை யனுசரித்த குடிஜனங்கள் திம்மியென்று அழைக்கப் பட்டார்கள். எப்பொழுதும் இராணுவத்திற் சேர்ந்து சேவிக்கக்கடமைப் பட்டவர்களாயிருந்த முஸ்லிம்கள் பத்தி லொன்று வீதம் வரிகொடுத்தார்கள். திம்மிகள் இராணுவத்திற் சேருதற்குக் கடமை யுள்ளவர்களல்ல. ஆதலின் அவர்கள் அதிகமான வரி கொடுத்தார்கள். ஜனங்களுள் அதிகப் பற்றானவர்கள் யாதும பலபந்தமின்றியே இஸ்லாமார்க்கத்தை யொப்புக்கொண்டார்கள. இவர்களுக்கும் அங்கு குடியேறிய அறபிகளுக்கு மிடையில் விவாகங்கள் நடந்தன. பல பெர்ஷியர்கள் அறபிகளின் கோத்திர சகோதரத் தன்மையில் (மவாலி) சேர்க்கப் பட்டார்கள். பிரதானவேலைகள் செய்தவர்களும் வேறு விதமாய்க் கீர்த்தியடைந்தவர்களுமான பொஷியர்கள் உதவிப்பணம பெறுபவர்களாய் இராசாங்கப் புத்தகத்தில் வரையப் பட்டார்கள். இஸ்கந்தருல் ஞாரி அரசரின் காலத்தில் நடந்தது போலவே பெர்ஷியாவில் குருமார்கள் நீண்ட காலம் குழப்பத்தையும் துன்பத்தையும் விளைத்தார்கள். அவர்கள் பழைய மார்க்கத்திலிருந்த ஜனங்களைக் கலகத்துக்குப் பலமுறை தூண்டிவிட்டார்கள். இக்கலகங்கள் அடக்கப்படும் பொழுது இருபக்கத்திலும் கொடுமையான செய்கைகள் நிகழ்ந்தன. ஆகிலும் அப்பாஸிய்யா கலீபாக்களின் யூகமும் இணக்கமு முள்ள ஆளுகையும இஸ்லாமார்க்கத்தின் வியாபகமும் பிற் காலத்தில் வெறுப்பின் காரணங்களை யகற்றி விட்டன.

(இன்னும் வரும்.)

## மிஸ்றில் பிறிட்டிஷியரின் கொடுங் கோன்மை.

(தொடர்ச்சி)

மெஸ் கிலாட்ஸ்ரோன் எழுதிய கடிததநி லுள்ள வாக்குத்தத்தமே அறபி பாக்ஷா தலல்கபிர் யுத்தததில் தோல்வியான பிறகு அவரையும் அவரின் தோழர்களையும் அவர்களின் சத்துருக்களுக்கு வொப்புக கொடுத்தற்கு நாடப்பட்ட பொழுது குறுக்கிடவும் அவர்களின் உயிர்களை இங்கிலாந்திலிருந்த சில பரோபகாரிகளின் துணையைக் கொண்டு காப்பாற்றவும் மெஸ் பினன்றுக்கு வுதவியா யிருந்தது. பிளன்று துரையும அவரின் நேசர்களும் அறபி பாக்ஷாவையும் அவரின்தோழர்களையும் கதீவைக்கொண்டு தூக்கிப் போடுதற்கு எண்ணப்பட்ட குற்றத்தைத் தடுத்துவிட்டாலும், அந்த பாக்ஷாக்களின் வழக்கை லோர்டு டபறின் இணக்கத்துக்குக்கொண்டு வந்த பின்பு மறியறகாரர்களுக்குப் பொதுவாய் மன்னிப்புக் கொடுக்கபடு மென்று வாக்குத் தத்தம் செய்யப் படடாலும், சார் அட்வர்டு மலற்றும் மற்றைய பிறிட்டிஷிய வுத்தியோகத்தர்களும் மிஸ்றில் நீதிவிஷயத்தைத் திருத்த வேண்டு மென்று வுரத்துப் பேசினலும், அதிக காலஞ் செல்ல முன் இங்கிலீஷியர்களோடு முட்டிக் கொண்ட சுதேசிகள் மீது பழிவாங்கும் ஆக்கினைகளை விதிக்க பழைய வொழுங்கே கயரோவில் இங்கிலீஷிய இராணுவ சட்டத் தினதும் அதற்கொத்தாசை யாயிருந்த கதீவின் கோடுகளினதும் துணையைக் கொண்டு கைக்கொள்ளப்பட்டது. இதன் பிரதானமான வுதாரணம் புறபஸர் பாமரின் மரணத்தைக் குறித்த வழக்கே.

புறபஸர் பாமராகிறவர் இங்கிலாந்தில் கேம்பிரிஜ் கல்லூரியில் அறபு உபாத்தியா யிருந்தவர். அவரை மிஸ்று யுத்தம் நடந்த காலத்தில் அட்மிறல்றியி லிருந்த லார்டுநோர்த்துபுறூக்கு என்பவர் சுவேஸ் வாய்க்காலுக்குக் கிழக்கே வசித்த பதவிகளிடத்துக்கு ஓர் அந்தரங்க விஷயமாய் அனுப்பினர், கயரோ அரசாட்சிக்கு விரோதமாய் அந்த பதவிகளைத் திருபபி விடுதற்காய் மேற்படி புறபஸர் 20 ஆயிரம் பவுன்களோடு அங்குசென்றனர். அது யுத்தகாலமாயிருந்ததாலும் மேற்படி பணத்தில் 3000பவுனை யெடுத்துக்கொண்டு புறபஸர் பாமரும் இராணுவத்தையும் கப்பற் சேனையையும் சேர்ந்த அவரின் இருதோழர்களும் வேஷமாறிப் பிரயாணஞ்செய்யும்பொழுது அம்மூன்று இங்கிலீஷ்காரர்களும் வேவுகாரர்களாய் எண்ணப்பட்டு கொல்லப்பட்டார்கள். அவர்களின் மரணத்துக்காகப் பழிவாங்கப்பட்டது. அவர்கள் கொல்லப்பட்ட வனத்துக்கு லெப்றினன்று கர்னல் வறன் என்பவர் ஓர் சேனையோடும் கதீவிய அரசாட்சியால் கொடுக்கப் பட்ட பதவிகளோடும் அனுப்பப் பட்டார். அவர் அங்கு போய்ச் சேர்ந்தவுடன் அக்கிராமத்தில் காணப்பட்ட பதவிகளான ஆண்களையும பெண்களையும் பிள்ளைகளையும் மொத்தமாய்ப்பிடித்து சுவேசுக்குக் கொண்டு வந்து சிறைச்சாலையி லடைத்து அவர்களுள் ஐந்து பேர்களைக் கொலையைக் கொண்டு ஆக்கினை செய்யக் கூடிய விதமாக மேற்படி, மூன்று இங்கிலீஷியர்களைக் கொன்றதற்காய் அவர்களுக்கு விரோதமாக வழக்குக் கொண்டு வந்தனர். அவர் குற்றஞ் சாட்டு

தற்கு மனிதர்களைத் தெரிந்துகொண்ட விதம் ஒழுங்கற்றது. அவர் மறியற்காரர்களோடு நேசமாயிருப்பது போற் காட்டி அவர்களை யொருவருக்குப் பின் ஒருவராய்த் தமக்கருகே இருக்கச் செய்து அவர்களுக்குக் கோபியும் ஸிகறட்டும் கொடுத்து, அவர்களுக்கும தமக்கு மிடையிலுண்டுபட்ட சம்பாஷணையை ஓர் துவிபாஷிகரைக் கொண்டு மொழிபெயர்க்கச் செய்து அவர்களுட் தேவையான மட்டுப் பேர்களைக் குற்றப்படுத்தத் தக்க சாட்சியைச சேர்ந்தனர். பின்பு அவர்களை வெளியாசாரத்துக்காய் ஸகாஸிக்கிலுள்ள வோர் சுதேச கோட்டுக் கனுப்ப, அக்கோடு அவர்களைக் கொலைக்குத் தீர்மானிததது. அப்பொழுது அவர்கள் தூக்கப்பட்டார்கள். ஆகிலும் பழிவாங்குதல் அதனோடு நின்று விடவில்லை. அதற்கு ஆறுமாதத்திற்குப் பின் பிளன்று துரை சுவேசுககுப் போனபொழுது வறன் பிடிததுக் கொண்டுவந்த மேற்படி பதிவிகளில் ஒரு கூட்டத்தைப் பெண்களோடும பிள்ளைகளோடும் கண்டனர். அவர்கள் குற்றஞ் சாட்டப் படாதிருந்தும் சிறைச்சாலையில் வைககப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய காரியத்தை மெஸ். பிளன்று மிஸ்றில் அக்காலததில் நியாய விஷயத்தில் அரசாடசிக்குப் புத்தி சொல்லுகிறவாயிருந்த சார் பன்ஸன் மக்ஸ்வல்லுக்கும் மெஸ்றர் கிலாட்ஸ்ரேன் மந்திருக்கும தெரிவிதது அவர்களை விடுதலையாக்கினா. அக்காலத்தில் சுவேஸில் பிறிட்டீஷிய கன்ஸலா யிருந்த மெஸ். வெஸ்றே கர்னல் வறனின் ஒழுங்கைப் பற்றிய விபரங்களை மெஸ் பிளன்றுக்கு அறிவித்தனர். பெண்களைப் பிடித்ததறகாய் சார் பென்ஸன் மக்ஸ்வல் கோபங் கொண்டனர்.

1883 ம் ஆண்டின் மூற் கூற்றில் மிஸ்றில் பிறிட்டீஷியரின் கண்சாடையோடு நீதிக்கு விரோதமாய்ச் சமபவித்தநிந்தையான காரியஙகள் தந்தாவில் அபூதியாவையும அலக்ஸாண்டிரியாவில் சுலைமான் சாமியையும் தூக்கியதே. அவை நேராய் இங்கிலீஷ் காரியகாரரின் தூண்டு கோலால் சம்பவித்த காரியங்களல்ல. ஆகிலும் அவ்விருவரின் குற்றம் அத்தாட்சிப் படுத்தப்படுவதில் பிறிட்டீஷிய துரைத்தனத்தாருக்கு விருப்ப மிருந்தது. அபூதியா ஆகிறவர் அறபி பாக்ஷாவின் சேனையிலிருந்த வோர் உத்தியோகத்தர். அவர் 1882 ம் ஆண்டு நடந்த யுத்தத்தின் துவக்கத்தில் தந்தாவில் கதிவைச் சேர்ந்தவரான தேசாதிபதியின் கண்சாடையோடு கிறீஸ்தவர்கள் சங்காரஞ்செய்யப் பட்டபொழுது குறுக்கிட்டு அதனைத் தடுத்தனர். சுலைமான் சாமியே சேனையின் தலைவராயிருந்து ஜூன் மாதம் 11 ந்திகதி அலக்ஸாணடிரியாவில் கலகத்தை நிறுத்தினா. இந்த இரண்டு கலகங்களும அறபியைச் சேர்ந்தவர்கலால தூண்டிவிடப் பட்டதென்று இங்கிலீஷ் துரைத்தனத்தார் கூறியிருந்தனர். அவர்கள் தாம் மிஸ்றில் ஆயிதங்களோடு குறுக்கிட்டதற்கு அக்கலகங்களே காரணமென்று இஸ்தம்பூல் கன்பறன்ஸில் லார்டு டபறினைக் கொண்டு தெரிவித்தார்கள். அலக்ஸாண்டிரியா சுடப்பட்டகாலத்தில் அதற்கு தீமூட்டினரென்று சுலைமான் சாமி குற்றஞ்சாட்டப்பட்டதால் அவருக்கு விரோதமான வழக்கு பிறிட்டீஷிய வரசாட்சிக்குப் பலனுள்ளதாயிருந்தது. ஏனென்றால் அவர் குற்றவாளியாவது கொ

ண்டு அப்பட்டணம் எரிக்கப்பட்டதற்காக பிரிட்டிஷியருக் குண்டாயிருந்த பொறுப்புக் குறைந்துவிட்டதாலென்க. சுலைமான் சாமியைத் தூக்கியதற்காயும மிஸ்றில் நடத்தப்பட்ட வேறு அட் கிர்த்தியங்களுக்காயும் இங்கிலாந்தில் லோர்டு றன்டொல்பு சேர்சில் அவர்களால் மெஸ்றர் கிலாட்ஸ்ரோனின் அரசாட்சி மீது பழி சுமத்தப்பட்டது.

1886 ம் ஆண்டு லோர்டு ஸோல்ஸ்பெரி முதன் மந்திரியாகி மிஸ்றை இங்கிலீஷியர் விட்டு விடுதற்கு சுல்த்தான் அவர்களோடு டிறமன் வுல்பு பேசிய பொருத்தம் தவறி லோர்டு குறோமர் கயறோவில் பூரண வதிகாரத்தோடு ஏற்படுத்தப் பட்டதோடு திருத்தங்கள் துவங்கப்பட்டன. நியாய விசாரணை செய்யும் கோடுகள் திருத்தப் பட்டன. சுதேசிகளுக் கிடையில் நீதி படிப்படியாய்த் திருத்தப் பட்டது. இந்தக் காலத்தைக் குறித்து லோர்டு குறோமர் தன்சாவை புலூபுக்கில் பேசுகிறார். ஆகிலும் அந்தக்காலத்தின் துவக்கத்தில் ஓர் கொடுமையான காரியம் நடந்தது. அதைக் குறித்து அவர் யாதொன்றும் பேசவில்லை. அது மிஸ்று சுதேசிகளுக்கும் மிஸ்றிலுள்ள பிரிட்டிஷிய சேனைக்கும் இடையி லுள்ள சம்பந்தத்தைத் தாவக்கூடிய ஓர் குற்றச்சாட்டை விசாரணை செய்தபொழுது இராணுவ சட்டத்தை யுபயோகித்ததே. அந்தக் காரியத்தில் நீதியாவது சீர் திருத்தமான சட்டமாவது கவனிக்கப்படவில்லை. அது கிஸா கிராமத்தில் காடை சுட்ட சண்டையைப் பற்றிய காரியமே. அது வருமாறு:—

வெல்ச் றஜிமன்றைச் சேர்ந்த ஸ்கொபீல்டு லீத்து என்ற இரு வுத்தியோகத்தர்கள் 1887 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 27 ந் திகதி ஞாயிற்றுக் கிழமை கிஸா பிரமிட்களுக் கயலில் சாதாரண வுடையில் காடைசுடும் பொழுது நான்கு அறபிகளைத் தற்செயலாய்ச் சிறு சன்னங்களைக் கொண்டு காயப்படுத்தி விட்டார்கள். அந்த அறபிகள் கோபங் கொண்டும் உறுக்கிக் கொண்டும் அவ்வுத்தியோகத்தர்களிட மிருந்தத் துப்பாக்கிகளைப் பறிக்கத் துணிந்த பொழுது அறபிகளுள் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இன்னுமொருவர் காயப்படுத்தப்பட்டார். இதைக் கண்டவுடன் அயல் கிராமங்களிலிருந்த ஜனங்கள் கூட்டமாய் வந்து வுத்தியோகத்தர்களைப் பிடித்து அவர்களின் கைகளையும் கால்களையும் பொலிஸ் வருமளவு கட்டி வைத்தார்கள். பொலிஸ் வந்த பின்பு விடுதலையாக்கப் பட்ட மேற்படி வுத்தியோகத்தர்கள் மேற்படி விஷயத்தைக் கயறோவி லிருந்த சிரேஷ்ட சேனாதிபதிக்குத் தெரிவித்தார்கள். அப்பொழுது வோர் இராணுவ கொமிஷன் நியமிக்கப்பட்டதோடு சுதேசிகள் மதவைராக்கியத்தின் கொதிப்பைக் காட்டினார்க ளென்றும் அவர்களுக்குத் தக்க பாடம் பயிற்ற வேண்டு மென்றும் தீர்மானிக்கப் பட்டது. அத்தீர் மானப்படி பல கிராமங்களிலுல்ல தலைமையான மனிதர்கள் கசையாலடிக்கப்பட்டார்கள். அந்த ஆக்கினையை ஸ்டாண்டர்டு பத்திரிகையின் கயறோ கடிதர் கீழ் வருமாறு விவரிக்கின்றார்:—

" கிஸா பிரமிட்களுக் கயலில் பிரிட்டிஷிய வுத்தியோகத்தர்கள் தாக்கப் பட்டதைக் குறித்து நான் தந்திமார்க்கமாய் அறிவித்த விபரங்கள் சரியானவைகளே. ஆகிலும் கசையாலடிக்கப் பட்ட

தோடு சில மறியற்காரர்கள் மீது தெண்டமும் விதிக்கப் பட்டதென்று நான் தெரிவிக்கத் தவறிவிட்டேன். மூன்று செய்குகள் தெண்டத்தைக்கொண்டும் சிறையிருப்பைக் கொண்டும் ஆக்கினை செய்யப் பட்டார்கள். தீர்ப்பின் நிறைவேற்றத்தைப் பார்ப்பதற்காய் மேற்படி வுத்தியோகத்தர்கள் சேர்ந்திருந்த வேல்சு பட்டாளத்தின் இரு கொம்பனிகள் வியாழக்கிழமை பின்னேரம் 3 மணிக்கு மறியற்காரர்களின் கிராமங்களுக்குச் சென்றன. பதி மீதேறிய சுதேச பொலிஸோடு புலீக் பேயும் இங்கிலீஷ் இராணுவ பொலிஸோடு கப்றன் பிறீமனும் சமுகங் கொடுத்தனர். இவர்கள் குதிரைப் பட்டாளங்களிலிருந்து தெரிந்தெடுக்கப் பட்டவர்கள். 60 வது றைபல் பட்டாளத்தைச் சேர்ந்த கப்றன் றிட்லும் வந்திருந்தனர். மறியற்காரர்கள் முக்கோணததில் கட்டப்பட்டு கிஸா மறியற் சாலையிலுள்ள பிறிட்டிஷிய காவலர்களால் நன்றாய்க் கசையைக் கொண்டு அடிக்கப் பட்டார்கள். மறியற்காரர்களுள் முதியவர்கள் நன்றாய் ஆக்கினையைச் சகித்துக் கொண்டார்கள். இளையவர்கள் சத்தமிட்டார்கள். கசையாலடிப்பது குர்பாஷாலடிப்பதைப் போல் கடினமானதன்று. சுதேசிகளைப் பலமுறையும் முதுகிலும் காலிலும் குர்பாஷாலடிப்பது வழக்கம். ஓர் மரகாணத்திற் சிலர் அடிக்கப் பட்ட பின்னர் போர்வீரர்களும் காவலர்களும் பொலிஸ்களும் அதே விதம் இன்னுமொரு கிராமத்துக்குப் போய் அங்கு சிலரையடித்தார்கள். அப்பொழுது வெல்சு பட்டாளத்தின் தளகர்த்தரான கர்னல் தல்லலக்குவோர் சிறு பிரசங்கம் பிரசங்கித்து பிறிட்டிஷியர் மிஸ்றிலிருப்பது ஐரோப்பியர்களையும் சுதேசிகளையும் பாது காக்கவென்றும் அவர்கள் அத்தேசத்துக்காய்த் தங்களிரத்தத்தைச் சிந்தியிருக்கிறார்களென்றும் ஒழுங்கை நிலைப் படுத்த விரும்புகிறார்களென்றும் கூறினர். ஆதலின் திரும்பவும் அவ்வாறான கொடுமை சம்பவித்தால் குற்றஞ் செய்தவர்கள் இதைப்பார்க்கிலும் கடினமாய் ஆக்கினை செய்யப் படுவார்கள் ஆகிலும் ஐரோப்பியர்கள் சுதேசிகளைப் பலமுறையில் அவர்களின் வேளாண்மைகளை யழித்துத் துன்பப் படுத்துகிறார்களென்பதைச் சொல்ல வேண்டியதாயிருக்கின்றது. கயறோவுக்கயலில் எப்பொழுதும் வேட்டைப் பெருட்கள் காணப் படுகின்றன. வேட்டைக்காலந் துவங்கினவுடன் கிரீக்கர், இற்றலியர், பிறான்ஸியர், லிவண்டியர், முதலியவர்களும் இங்கிலீஷியர்களும் வேட்டையாடப் போய்ச் சுதேசிகளின் பயிர்களைச் சேதப்படுத்துகிறார்கள். திரும்பத் திரும்பச் சுதேசிகள் மறுத்துரைத் திருக்கிறார்கள், ஆகிலுமென்ன செய்யலாம். கபிச்சுவேசன் (புறதேசத்தவர் தாம் செய்த குற்றத்துக்குப் புறதேச தாணுதிபதிகளால் விசாரணை செய்யப்பட்டு ஆக்கினை செய்யப் படுதல்) குறுக்கிடுகின்றது. இது வோர் பெரும் வெட்கம். அறபிகளின் மீது விதிக்கப்பட்ட ஆக்கினைக்குப் பதிற் செய்யும் பொருட்டு இனிமேல் வேட்டைக்குச் செல்லும் பொழுது துட்கிர்த்தியஞ் செய்கின்ற ஐரோப்பியனைப் பிடித்து யாதும் இரக்கமின்றித் தூக்கி விடுகிறதாக கிராமங்களின் செய்குமார்கள் கூறி யிருக்கிறார்களென்று நான் இன்று கேள்விப்படுகின்றேன்" என்றதே.

மேற்படி விஷயத்தைக் குறித்து மிஸ்றர் பிளன்று சொல்லுகிறதாவது:— “இந்த வழக்கு வொரு நியாயத்தைச் சேர்ந்ததுமல்ல. சேனாதிபதி கைக்கொண்ட வொழுங்கு லோர்டு குரோமரால் ஏற்றுக் கொள்ளப் பட்டதோ அல்லவோ வென்று நான் திட்டமாய் அறிந்து கொள்ளவில்லை. ஆகிலும் அவரும சீமை யரசாட்சியும் அதை யொருவேளை யேற்றிருக்கலாம். நான் இரண்டு வருஷங்களுக்குப்பின் நாட்டவார்களிடம் விசாரித்த பொழுது முதல் அறபிகளைக் காயப் படுத்திய சூடு தற்செயலாய்ச் சுடப்பட்டாலும் நாட்டவனைக் கொன்ற இரண்டாவது சூடு வேண்டுமென்றே அச்சத்தாற் சுடப்பட்டதென்று அந்நாட்டவர்கள் ஒற்றுமையாய்க் கூறினார்கள். அது அப்படியே [illegible]ந்ததென்று நான் உறுதியாய்ச் சொல்வதல்ல. அது அவ்விடத்தில் அப்படியே அறியப் பட்டிருக்கிறது. அந்த நாட்டவனைக் கொன்றதற்காக மேற்படி வுத்தியோகத்தர்கள் கோர்டு மார்ஷலைக் கொண்டாவது வேறு விதமாவது விசாரணை செய்யப் படவில்லையென்று நான் நம்புகிறேன்,, என்றதே.

1890 ம் ஆண்டு சார் ஜோன் ஸ்கொட் மிஸ்று நியாய விஷய மந்திரிக்குப் புத்தி சொல்லுகிறவராய் நியமிக்கப்பட்டனர். அவர் ஓர் உண்மையுள்ள மனிதன். மிஸ்று சட்டத்தில் மிக்க அநுபோகமுள்ளவர். சுதேசிகளோடு உண்மையான பட்சமுள்ளவர். அவரின் கீழ் சுதேச கோடுகள் திருத்தப்பட்டன. அங்கு நடைபெற்ற வியவகார விதி மாற்றப் பட்டது. நியாயாதிபதிகளும் மாற்றப் பட்டார்கள். அவர் உண்மையும் தன்னிஷ்டமுமுள்ளவர்களை நியாயாதிபதிகளாய் நியமித்தாரன்றி பிற்காலத்தில் இங்கிலீஷியரின் கட்டளைகளுக்குத் துணையாய் இருந்தவர்களைப்போன்றவர்களை நியமிக்கவில்லை. மேற்படி ஸ்கொட் காரியத்தில் நியாய விஷய மந்திரியின் நிலைமையிலிருந்த காலமெல்லாம் சுதேச கோடுகளிலும் அவற்றின் தீர்ப்புகளிலும், அவை இங்கிலீஷியர்களுக்கு விரோதபாயிருந்தாலும் சரி, நம்பிக்கை யுண்டாயிருந்தது. ஆகிலும் அவருக்கும் லோர்டு குரோமருக்கு மிடையில் சுதேச அப்பீல் கோட்டுக்கு நியாயாதிபதிகள் நியமிக்கிற விஷயத்தில் எப்பொழுதும் விரோத முண்டாயிருந்தது. லோர்டு குரோமர் மிஸ்றில் இங்கிலீஷியரின் இராஜாங்க நிலைபரத்தைப் பலப்படுத்தற்காய்க் கோடுகளைத் தம் கருத்துப்படி நடத்தவும் நியாயாதிபதி யுத்தியோகங்களுக்கு அதிகமான இங்கிலீஷியர்களை நியமிக்கவும், இங்கிலீஷியரின் கருத்துக் கிணங்கக்கூடிய சுதேசிகளை மாத்திரமே நியாயாதிபதிகளாய் ஏற்படுத்தவும் விரும்பினர். ஸ்கொட்டோ இங்கிலீஷியர்களைப் பார்க்கிலும் சாமார்த்திய முடையவர்களும் இங்கிலீஷியர்களைப்போல் நம்பப்படத் தக்கவர்களும் சுதேச நியாயாதிபதிகளுக்குட் பலர் இருக்கின்றார்களென்று எண்ணினர். இது கடைசியாய் சார் ஜோன் ஸ்கொட், முன் சார் பென்ஸன் மெக்ஸ்வல் செய்தது போல், விலகிக் கொள்ள காரணமாயிற்று. அது முதலே மிஸ்றில் நியாய விரோதம் நடப்பதும் நியாயாதிபதிகளின் தன்னிஷ்டத்தில் குறுக்கிடுகிறதும் காணப்படுகின்றன.

மிஸ்றிலுள்ள பிரிட்டிஷிய சேனைக்கும் சுதேசிகளுக்கும் இடையிலுள்ள சம்பந்தம் சீர் திருத்தப்

படவில்லை. இங்கிலீஷ் போர்வீரர்களுக்கும் சுதேசிகளுக்கும் கயரோவிலும் அலக்ஸாண்டிரியாவிலும் தெருக்களில் நடந்த சண்டைகளைப்பற்றிய வழக்குகள் பட்சபாத மில்லாமல் வழக்கமான கோடுகளில் விசாரிக்கப் பட்டன. ஆனால் உத்தி யோகத்தர்கள் சேர்ந்திருக்கிற பாரதூரமான வழக்குகள் இராஜாங்கத்துக்கடுத்த நியாயங்களுக்காகக் கொடுங்கோன்மையாய் நடத்தப்படுகின்றன. சுதேசிகளுக்கு விரோதமான குற்றச்சாட்டுள்ள வழக்குகளே வழக்கமான சுதேச கோடுகளால் விசாரிக்கப படுகின்றன. ஆனால் ஒருஸோல்ஜர் சுதேசிகளையடித்த வழக்கு இங்கிலீஷ் இராணுவ கோட்டில் மாத்திரமே கொண்டு வரப்படலாம். காரியம் இப்படியிருந்தும் தமது ஜனங்களுக்குச் சட்டப்படி பாதுகாப்புக் குறைவா யிருக்கிறதென்று இங்கிலீஷ் சேனாதிபதி முறையிடுகின்றார். 1894—95 ம் ஆண்டு குளிர்காலத்தில் சுவேஸில் பிறிட்டீஷ் கப்பற்காரர்களுக்கும் சுதேசிகளுக்கும் இடையில் ஓர் சண்டையுண்டு பட்டது. இதில் சுதேசிகளுக்குச் சாதாரண கோட்டால் கொடுக்கப்பட்ட ஆக்கினை போதாதென்று லோர்டு குரோமரால் எண்ணப் பட்டது. இதற்காகவும் அக்காலத்தில் அவருக்கும் கதீவுக்கு மிடையில் நேசம் முறிந்திருந்ததாலுமே லோர்டு குரோமர் 1895 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 25 ந் திகதியைக் கொண்ட சட்டத்தைப் பலபந்தமாய் மிஸ்று கவர்னமேந்து ஏற்றுக் கொள்ளச் செய்தனர். அச்சட்டத்தைக் கொண்டு மிஸ்றைப் பிடிததுக் கொண்டிருக்கிற பிறிட்டீஷிய சேனையையும் பிறிட்டீஷிய கப்பற் சேனையையும் தாவக் கூடிய சகல வழக்குகளையும் தாம் பிறிட்டீஷிய சேனாதிபதியோடு சேர்ந்து விசாரித்தற்கு லோர்டு குரோமருக்குத் தத்துவம் கொடுக்கப் பட்டது. அச்சட்டப்படி ஓர் ஸோல்ஜர் தன்னை ஓர சுதேசி யடித்ததாக சேனாதிபதி யிடம் முறையிட்டால் அவ்வழக்கைச் சாதாரணமான கோட்டின் அதிகாரத்திலிருந்து அகற்றும் படி இங்கிலீஷ் ஏஜன்றுன லோர்டு குரோமரை சேனாதிபதி கேட்கலாம். அவ்வழக்கை லோர்டு குரோமரும் அவராற் றெரிந்து கொள்ளப் படுகிற இங்கிலீஷிய மிஸ்றிய நியாயாதிபதிகளும் விசாரித்துத் தமக்குச் சித்த முள்ள ஆக்கினையை நியமிக்கலாம். அவர்களின் தீர்ப்புக்கு அப்பீலில்லை.

சார் ஜோன் ஸ்கொட் மிஸ்றில் உத்தியோகத்தில் இருந்தகாலத்திலேயே மேற்படி ச[illegible]ங் தீர்மானிக்கப் பட்டாலும் அது அவரால் துவங்கப்பட்டதென்று நமபுகிறது வருத்தம். மேலும் மேற்படி புதிய கோட்டின் கெட்ட சாயல்கள் ஸ்கொட் விலகிய பின்னே தோன்றின, தாம் நியாய விஷய மந்திரி யோடு சேர்ந்திருந்ததால் மேற்ப்டி புது கோடடுக்கு நியாயாதிபதிகளைத் தெரிந்து கொள்வதில் கெடுதியைத தடுத்துக் கொள்ளலாமென்று ஸார் ஸ்கொட் எண்ணியிருக்கலாம். அவர் போய் விட்டதோடும் சகல தததுவத்தையும் லோர்டு குரோமர் எடுத்துக் கொண்டதோடும் நடுநிலைமை குறைந்து அற்றுப போகிற எலலைக்கு வந்திருப்பதும் தவிர மேற்படி சட்டடம் எவ்வித அநீதியைச் செய்யத் தக்கதென்று இன்று சம்பவிக்கிற கொடுமைகளைக் கொண்டு நாங்களறிந்து கொள்ளுகின்றோம்.

இந்தக் காரியத்தைப் பருப்பித்துச் சொல்லவே கூடாது. 1895 ம் ஆண்டின் சட்டப்படி கூட்டுகிற கோடுகள் கோர்ட் மார்ஷலைப் பார்க்கிலும் தன்னிஷ்டத்தில் குறைந்தவைகளாயிருந்தாலும், அவைகளால் விசாரணை செய்யப்படுகிற சுதேசிகளுக்குக் கோர்ட் மார்ஷலால் கிடைக்கிற பாதுகாப்பைப் பார்க்கிலும் குறைவான பாதுகாப்பே அவைகள் கொடுக்கின்றன. ஏனென்றால் யுத்தகாலமல்லாத காலங்களில் ஒரு கோர்ட் மார்ஷலும் கொடுக்கக் கூடாத ஆக்கினைகளை மேற்படி கோடுகள் கொடுக்கக் கூடும். மேலும் அந்தக் கோடுகளின் நியாயாதிபதிகளுட் சிலர் சுதேசிகளாயும் சிலர் இங்கிலீஷியர்களாயும் இருப்பதால் அவ்வாக்கினைகளின் வெறுப்பு சுதேச நியாயாதிபதிகளின் மீது எறியப் படுகின்றது. சுதேச நியாயாதிபதிகள் இல்லாதிருக்கில் அவ்வெறுப்பு பிரிட்டீஷிய சேனாதிபதியின் மீதும் பிரிட்டீஷிய ஏஜன்றின் மீதும் தங்கும். மிஸ்ரின் கிரிமினல் சட்டம் குற்றமற்ற மனிதர்களைக் குற்றப்படுத்தற்குப் பழிக்கஞ்சாதவர்களுக்குதவியாயிருக்கின்றது. ஒரு மிஸ்ருச் சுதேசியின் மனைவியை ஓர் இங்கிலீஷ் ஸோல்ஜர் பங்கப்படுத்தத் துணிந்த பொழுது அவனை அந்தச் சுதேசி அடிப்பானாயின் அவன் 1895 ம் ஆண்டின் சட்டப்படி கொலைக்குத் தீர்மானிக்கப் படக் கூடும். அவ்விதமானவோர் அநீதியான காரியத்துக்கு தன்ஷாவை வழக்குக் கிட்டத்தட்ட வொத்திருக்கின்றது.

ஓர் பிரிட்டீஷிய ஸோல்ஜர் தன்னையடித்ததாய் முறையிட்டு அம்முறைப்பாடு பிரிட்டீஷிய சேனாதிபதியாலும் பிரிட்டீஷிய ஏஜன்றாலும் உறுதிப் படுத்தப்படுமாயின் மேற்படி சட்டப்படி எவ்வித ஆக்கினையும் செய்யக் கூடும். ஆகிலும் அச்சட்டத்தை நடத்தக் கூடியது மிஸ்றிலுள்ள பிரிட்டீஷிய சேனையின் உத்தியோகத்தர்களும் போர்வீரர்களும் இராணுவ கடமையைச் செய்யும் பொழுது தாக்கப் பட்டால் மாத்திரமே. இதை மிஸிரைப் பற்றிய புளூ புக்கில் (1901) காணலாம். அதில் மிஸ்றில் அக்டின் பிரிட்டீஷிய ஏஜன்றாயிருந்த சார் றனல் றட் உத்தியோகக் கடமையி லில்லாத போர்வீரர்கள் தாக்கப்பட்ட வழக்கொன்று வழக்கமான கோட்டால் விசாரிக்கப் பட்டதைக் குறித்துப் பேசும் பொழுது 1895 ம் ஆண்டின் சட்டத்தைப் பற்றிக் கீழ் வருமாறு சொல்லுகிறார்:—

"அதிகதத்துவங்களை யுடைய இன்னுமொரு கோடிருக்கின்றது. அதன் தீர்ப்புகளுக்கு அப்பீலில்லை. அதை விசேஷமான காரியங்களில் மிஸ்ரைப் பிடித்திருக்கிற பிரிட்டீஷிய சேனையின் உத்தியோகத்தர்களுக்கும் ஆட்களுக்கும் விரோதமாயுள்ள குற்றங்களை விசாரணை செய்தற்குக் கூட்டலாம். இந்தக் கோடு அதுவுண்டாக்கப் பட்டதின் பின்னர் இரண்டு முறையே நானறிய கூட்டப்பட்டிருக்கின்றது. அவ்விரு வழக்குகளிலும் தங் கடமையை யுத்தியோகவுடையில் நிறைவேற்றும் போர்வீரர்களுக்குப் பாரதூரமான குற்றங்கள் செய்யப்பட்டன. ஆகிலும் இந்தக் காரியத்தை விசாரிக்க அந்தக் கோட்டைக் கூட்டுவது அக்கோடு வுண்டாக்கப் பட்ட எண்ணத்துக்கும் கருத்துக்கும் விரோதமாயிருக்கும்" என்றே.

தன்ஷாவை வழக்கிலுள்ள வுத்தியோகத்தர்கள் சந்தோஷத்துக்குப் புறு வேட்டையாடப்

போனவர்களே யன்றி யுத்தியோக கடமையை நிறை வேற்றப் போனவர்களல்லர். ஆதலால் அவர்களின் வழக்கை 1895 ம் ஆண்டின் சட்டப்படி ஓர் விஷேச கோட்டைக் கொண்டு விசாரணை செய்யும் படி லோர்டு குரோமர் கட்டளை பண்ணியது சட்டத்துக்கு விரோதமானதும் நீதியற்றதுமான காரியமே.

லோர்டு குரோமர் மேற் சொல்லப் பட்ட வாறு மிஸ்றில் நியாய விஷயத்தில் குறுக்கிட்டுச் சட்டத்தை நெருக்குவதால் மிஸ்று கோடுகளின் தன்னிஷ்டத்துக்கும் நேர்மைக்கும் தீங்குண்டாகிறதாதால் இவ்விஷயத்தைக் கவனிக்கும் படி சார் எட்வர்டுகிறேயை நெருக்குகிறது கடமையான காரியம்.

(இன்னும் வரும்.)

## அலதீன் பேயின் கதை

(தொடர்ச்சி)

சென்ற பத்திரிகையில் அலதீன்பே ஆற்றுக்கருகாய் ஓர் அழகிய பெண்ணைக் கண்டது வரையிற் சொன்னோம்.

அலதீன் குதிரையை நடத்திக் கொண்டு சென்றனர். அவர் அப்பெண்ணின் முகத்தை யதிகமாய்க் காணக் காண தம் குதிரையின் கடிவாளத்தை யிழுத்திழுத்து அதனைக் கடைசியாய் ஓர் தானத்தில் நிறுத்தினர். அவர் அப்பெண்ணின் அழகைக்கண்டுத் திகைத்து விட்டனர். முன் அவரை மயக்கி விட்ட அழகு அவரின் மனத்திற் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பதிவாகி இப்பொழுது அதனைக் கவர்ந்து கொண்டது. அவளின் சௌந்தரியங்கள் ஒன்றின் பின் ஒன்றாய் வெளிப்பட்டன. அவள் ஆற்றுக்கருகாய் இருந்து அதில் தனது கால்களைப் போட்டுக் கொண்டிருந்தனள். அவளின் கால்கள் வெறுமையானவைகளாயிருந்தன. அவளின் அலங்காரமான ஸிலிப்பர்கள் கொஞ்சந் தூரத்தி லிருந்தன. அவளுக்கருகாய்த் தம்புரைப்போன்ற வோர் வாத்தியக்கருவி யிருந்தது ஆகிலும் அந்தப் பெண் ஆழ்ந்த சிந்தனையிலிருந்ததால் அவனின் வாத்தியமும் அவளைச் சுற்றியிருந்த வஸ்துக்களும் அவனின் எண்ணங்களை விட்டுத் தூரமாயிருந்தன.

அவள் அணிந்திருந்த சிறு அலங்காரமான சித்திரத்தையல் வேலைசெய்யப் பட்ட தொப்பியின் கீழால் அவளின் கறுப்பான நீண்ட தலைமயிர்ச் சுருள்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றின் சுபாவமான பள[illegible]ப்புச் சூரியகதிரில் துலக்கமானதாயிருந்தது. முஸ்லின் புடவையில் செய்யப் பட்டு அவளின் தொப்பியில் சேர்க்கப் பட்டிருந்ததும் அவளின் சரீர முழுதையும் மூடக் கூடிய பருப்பத்தை யுடையது மாகிய முக்காடு பின்னே போடப்பட்டு அதன் மடிப்புகள் பசுமையானபுற்றரையில் விழுந்து கொண்டிருந்தன. அவளின் கூந்தல் வளைந்த புயங்கள் மீது விழுந்து கொண்டும் அவளின் அழகிய புயங்கள் அவளின் உருண்டையான கரங்களுக்குப் பொருந்தியவைகளாயும் இருந்தன. அவளின் சட்டைக்கைகள் கட்டையானவைகளாயிருந்தனவால் காங்கள் வெறுமையானவைகளா யிருந்தன. மணிக்கட்டில் சிறப்பான காப்புகள் போடப்பட்டிருந்தன. அப்பெண் உயர்ந்தவள். அழகான தேகக் கட்டை யுடையவள். கருமைகலந்த பொன்னிறமுள்ளவள். அவளின் தோல் ஒளி யூடுருவதக்

கதாயும் கன்னங்களில் இரத்தம் பரம்புகிறதாயும் இருந்தன. முகம் வட்டமானதாயிருந்தது. தலை கழுத்தில் அன்னப்பட்சியின் தலையைப்போல் மெச்சத் தக்கதாய் நிறுத்தப்பட்டிருந்தது. அப்பெண்ணின் மேற்படி இலட்சணங்களை அலதீன் சில நிமிஷங்களாய்ச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் அவள் கண்களைப் பொத்திக் கொண்டு ஆலோசிக்கிறவளாயிருந்தனள். ஆகிலும் அவள் அந்தக்ஷணமே தலையை யுயர்த்திக் கண்களை விழித்து அலதீனைப் பார்த்த பொழுது அவளின் கண்களின் ஒளி அவரின் ஆத்மாவின் இருதயத்தில் களிப்பை யுண்டாக்கி விட்டது. அவளின் உடை பெறுமதியான தென்று நாம் சைகையாய்ச் சொன்னோம். அவளின் ...ட்டை பொன் சருகைவேலை யுள்ள கறுப்பு பட்டில் செய்யப்பட்டிருந்தது இரத்தினங்கள் பதிக்கப் பட்ட கொக்கி யுள்ள வோர் அலங்காரமான பட்டிகை யணிந்திருந்தனள். ஆகவே அவள அந்தஸ்தும் மேன்மையு முள்ள வொர் துரைசானியென்று அவளின் தோற்றத்தால் விளங்கிற்று. அன்றியும் அவள் அவ்வாறுளனவ ளென்பதைக் கொஞ்சந் தூரத்திலிருந்த வோர் அழகான கூடாரத்தின் வாயிலில் இரு வேலைக் காரப் பெண்கள் புஷ்டங்களைக் கொண்டலங்கரிக்கப் பட்ட புற்றரையிற் சாய்ந்து கொண்டிருந்ததைக் கண்ட அலதீன் நிச்சயமாய் அறிந்து கொண்டனர்.

மேற்படி வாலிப உதுமானியர் தாம் கண்டவைகளைக் கொண்டு கவரப்பட்டு வசியப் படுத்தப் பட்டது ஆச்சரிய மல்ல. சகல தோற்றங்களும் பஞ்சேந்திரியங்களை வெறிக்கச் செய்யத்தக்கவைகளாகவே யிருந்தன. கீழேயுள்ள கற்கள் தானும் தெரியக்கூடிய தெளிவான ஆறும், கனித்திரள்கள் நிறைந்த கொப்புகளையுடைய நிழலிடுகிற மரங்களும், புற்றரையில் சிதறப்பட்டிருந்த பலவித இலட்சணங்களுள்ள இலட்சக் கணக்கான புஷ்பங்களும், அப்புஷ்பங்களி லிருந்து கிளம்பும் பரிமளமும், மேகமற்ற நீலவர்ண ஆகாயமும் அத்தானத்தை மோக்ஷ லோகத்துத் தெய்வப் பெண் வசிக்கத்தக்க வோர் நந்தவனமாக்கிவிட்டன. அதுதாம் கதைகளில் வாசித்திருந்த அதிசயமான அந்தரங்கமுள்ள தானங்களிலென்றோ வென்று உற்சாயமுள்ள வாலிபரான அலதீன் எண்ணினர்.

அந்தப் பெண் தன்னைச் சமீபித்து வரும் குதிரைகளின் அடிச் சத்தத்தைக் கேளாது மெய்யாகவே ஆழ்ந்த சிந்தனையி லிருந்தாளா அல்லது அலதீன் தனது அழகைக் கண்டு மயங்கும் வரையில் மௌனமாயிருந்தாளா வென்று நாம் அறியோம். ஆகிலும் அவள் சில நிமிஷங்களுக்குப் பின் கண்களைத் திறந்து அலதீனைப் பார்த்து விட்டுத் திரும்பவும் கண்களைப் பொத்திக்கொண்டனள். திரும்பவும் அவள் கண்களைத் திறந்து வாலிப உதுமானியரை நன்றாய்ப் பார்த்து விட்டுச் சடுதியாய்த் தன் கடமை ஞாபகத்துக்கு வந்ததுபோல் தனது முக்காட்டை யிழுத்து முகத்தை மூடிக் கொண்டனள். அப்படி மூடிக் கொள்ளும் பொழுதும் தனது பார்வையை அலதீன் மீது எறிந்தனள்.

மேற்படி வாலிபரான முஸ்லிம் தமது காத்தைத் தமது தொப்பிவரையில் உயர்த்தியும் தமது தலையைக் கொஞ்சம் சாய்த்தும்

மேற்படி துரைசானிக்கு ஆசாரஞ் செய்தனர். இதற்குள் அவரின் விசுவாசமுள்ள இரு ஏவற்காரர்களும் அலதீனைச் சமீபித்து அவரின் குதிரை நின்ற விடத்துக்குத் தங்கள் குதிரைகளையும் நடத்திக் கொண்டு போனார்கள். இபுறாகீம் துரைசானியைக் கண்டவுடன் திப்லிசுக்குப் போகிற நேரான வழியைக் குறித்து விசாரித்துக் கொள்ளுதற்கு தருணங் கிடைத்ததென்று எண்ணினர். ஆகிலும் ஹாபிஸ் வாலிபராயும் பெண்களின் சௌந்தரியத்தை யுணரக் கூடியவராயும் இருந்ததாலும் அப்பெண் முகத்தை மூடிக் கொள்ளும் பொழுது அவளின் முகத்தைச் சாடையாய்க் கண்டதாலும் ‘‘அல்லாவினானே, அவளோர் அழகான பெண்’’ என்று மொழிந்தனர்.

‘‘மெய்யாகவே அவள் சுவர்க்க லோகத்துத் தெய்வப் பெண்ணாயிருக்கலாம். அவள் உலக மாதர்களில் ஒருத்தியாயிருக்கக் கூடாது’’ என்று அலதீன் பகர்ந்தனர்.

இபுறாகீம் தமது வாலிப எஜமானின் பரவசமான உற்சாகத்தை விரும்பவில்லையென்று அவரின் முகங் காட்டினாலும் அவர் தம எஜமானுக்கு மரியாதை வைத்தற்காய் யாதொன்றும் பேசாது மௌனமாயிருந்தனர்.

அலதீன் இன்னுங் கொஞ்சந் தூரம் தமது குதிரையை நடத்தி அப்பெண்ணிருந்த தானத்துக்கு ஆறு யாருக்குள்ளே நின்று திரும்பவும் ஆசாரஞ் செய்து ‘‘துரைமகளே இது திப்லிசுக்குச் செல்லுகிற நேரான வழியோவென்று தங்களிடம் விசாரித்தறியலாமா’’ என்று வினவினர்.

‘‘நீங்கள் வந்திருக்கிற திக்கின்படி இது நேரானவழியல்ல’’ என்று காதுக்கினிய சத்தத்தில் அந்தப் பெண் உத்தரங் கொடுத்தனள்.

‘‘அந்த அவலட்சணமான நாட்டவனைக் குறித்து எனக்குச் சந்தேகமுண்டாயிருந்தது’’ என்று இபுறாகீம் ஹாபிசுக்குத் தெரிவித்தனர்.

‘‘ஆகிலும் அங்கே யோர் வழியிருக்கிறது. அது நெடுந்தெருவுக்குச் செல்லுகிறது. ஆகிலும் இந்தத்தேசங்களை யறியாதவர்கள் அதைக்கண்டு கொள்ளுகிறது வருத்தம். நானும் திப்லிசுக்கே போகிறேன்’’ என்று சொல்லி விட்டு அப்பெண் அந்த பட்டில் பேச்சை நிறுத்தி விட்டனள். தான் அதிகமாய்ப் பேசி விட்டது போலும் தானும் ஜோர்ஜிய இராசதானியாகிய திப்லிசுக்கு அலதீனோடு போகக் கேட்டது போலும் அவள் எண்ணினாள்.

‘‘குல மகளே, தங்களுக்குத் தக்க வழித்துணை யில்லாதிருக்கில் எங்களுடைய துணையை யேற்றுக் கொள்வீர்களாயின் வழியில் தங்களைப் பாது காத்துக் கொள்வது எனக்குப் பெருமையையும் சந்தோஷத்தையும் தரும்’’ என்று அலதீன் கூறினர்.

அப்பெண் உடனே உத்தரஞ் சொல்ல வில்லை. அவள் திரும்பவும் ஆலோசிக்கிறவளா யிருந்தனள் என்பது முக்காட்டுக் கூடாய் தோன்றிய அவளின் முகத்தின் குறிகள் காட்டின; ஆகிலும் அ அவள் சடுதியில் தான் செய்யவேண்டிய காரியங்களைத் திட்டப் படுத்திக் கொண்டவளைப் போல் ‘‘அவ்வாறு தங்களோடு செல்லுவதில் யாதும் ஒழுக்கத்தவறின்று. உண்மையைச் சொல்ல வெனில் என்னோடு காவலாய்ச் செல்ல நியமிக்கப் பட்டிருந்த ஆண்கள் இன்னும் வரவில்லை. அவர்

களிங்கு வந்து என்னைக் காத்திருப்பார்களென்று எண்ணிய யான் நம்பிக்கை கெடுக்கப்பட்டேன். எனது ஏவற்காரர்கள் சமீபத்திலிருக்கிறார்கள். அவர்கள் தங்களின் ஏவற்காரர்களை மரியாதையோடு அங்கீகரிப்பார்கள், நான் தங்கள் முன் வைக்கக் கூடியதைப் பெற்றுக் கொள்ள தங்களுக்குத் தயவிருக்குமாயின் தாங்கள் பிரயாணதநிற் செல்ல முன் உணவருந்திக் கொள்வதே நல்லது" என்று மொழிந்தனள்.

இதைக் கேட்ட அலதீன் குதிரையிலிருந்து பாய்ந் திறங்கி றென்னை ஹாபிசிடங் கொடுத்தனர். இப்பொழுது சம்பவிக்கிற காரியத்தை இபுருகீம் துக்கிக்கிறவராய்த் தோன்றினும் தமது எஜமானை மறுத்து அவர் யாதொன்றுஞ் சொல்லவில்லை: அவர் ஹாபிஸோடு மேற்படி துரைசானியின் இரு ஏவற்காரப் பெண்களிருந்த தானத்துக்குப் போகும் பொழுது கூடாரத்தின் முன் சாய்ந்து கொண்டிருந்த அப்பெண்கள் எழுந்து அவர்களை யங்கிகரித்தார்கள். கூடாரத்துக்குச் சமீபத்தில் மூன்று குதிரைகள் புற்றரையில் மேய்ந்து கொண்டிருந்தன. குதிரைச் சேணத்தில் விரிக்கிற ஆடைகளும் அழகான சேணங்களும் கூடாரத்துக்கு ளிருந்தன. ஏவற்காரப் பெண்களுள் ஒருத்தி கறுப்பு நிறமுள்ள ஹபசிப் பெண். மற்றவள் சௌந்திரியமான ஜோர்ஜிய வாலிபப் பெண்.

வாலிப உதுமானியரின் ஏவற்காரர்கள் மேற்படி துரைசானியின் ஏவற்காரர்களோடு நேசங் கொண்டாடும் வேளையில் நாம் அலதீனையும் அழகுள்ள அவ்வன்னிய மாதையும் பற்றிக் கவனிப்போம். அந்தப் பெண் தனது சிறப்புள்ள கையைக் கொண்டு தமக்கருகே புற்றரையிலிருக்கும் படி சைகை காட்ட அலதீன் உட்கார்ந்தனர். அப்பொழுது அம்மாது தனது முக்காட்டை அகற்றி விட அவளின் முகத்தின் அழகைக் கண்ட அலதீன் அவளின் இலட்சணங்களைக் குறித்துத் தாம் முன் கொண்ட எண்ணங்களைப் பலப்படுத்திக் கொண்டனர். அவள் இருபது வயதுள்ளவளைப் போல் தோன்றினள். அவளின் முகரூபம் ஒழுங்கானது. கண்கள் பருப்பமானவை. அவை சில நேரம் பிரகாசமுள்ளவையாகவும் சில வேளை தயங்குகிறவைகளாயும் இருந்தன. அவற்றின் பார்வை இடைக்கிடை வாலிப உதுமானியர் மீது விழுந்து கொண்டிருந்தது. அவளின் வாய் சிறியதாயும் ஒடுக்கமானதாயும் இருந்தது. அவளின் உதடு நல்ல நிறமானது. அவள் பேசும்போது தோன்றுகிற அவளின் பற்கள் அவள் கழுத்தில் அணிந்திருந்த முத்துகளைப் போல் வெண்மையானவை. அவளின் சுவாசம் வாசனையானதாயிருந்தது. இவ்வாறு அவளை நெருங்கிப் பார்த்த பொழுது அவளழகான வோர் பெண்ணென்று அலதீனுக்குமுன்னுண்டான வெண்ணம் பூரணமாய்ப் பலப் படுத்தப் பட்டாலும், பெண்களின் ஆபரணமான அடக்கமுள்ள கூச்சம் அவளில் கொஞ்சங் குறைவா யிருப்பதை அலதீன் தனக்குண்டாயிருந்த அதிசய வெறியும் உற்சாகமும் தணிந்த பிறகு அறிந்து கொண்டனர்.

"நான் தங்களின் அறிமுகத்தைப் பெற்றுக் கொண்டதற்கு ஓர் வெடி வெடிப்புள்ள நாட்டவன் சொன்ன பொய்யான செய்திக்குக் கடமைப் பட்டவனாயிருக்கின்றேன்" என்று அலதீன் அப்

பெண்ணுக் கருகாய்ப் புற்றரையிலிருக்கும் பொழுது கூறினர்.

"தாங்களும் தங்களின் ஏவற்காரர்களும் இங்கிருப்பதால் நான் பெற்றுக் கொள்ளுகிற பாதுகாப்புக்கு எனக்கு வாக்குப்பண்ணப்பட்ட காவலர்கள் வாராதிருந்ததற்கே நான் கடமைப் பட்டவளாயிருக்கின்றேன்" என்று அப்பெண் திரும்பவும் அலதீனை யுற்றுப் பார்த்தவளாய்ப் பகர்ந்தனள்.

"இந்த ஜோர்ஜிய மாகாணங்கள் யாத்திரைக் காரர்கள் பிரயாணஞ் செய்தற்குப் பத்திரமானவையல்ல வென்பதை யான் அனுபோகத்தைக் கொண்டு அறிந்து கொண்டேன்" என்று அலதீன் கூறினர்.

"ஐய்யா, என்னை யொரு வேளை பிடித்துக் கொள்வார்களோ வென்று நான் அஞ்சுகிறவர்களை நீர் சந்தித்தீரோ" வென்று அப்பெண் வினவினள்.

"நீர் குறிப்பது கைரீகர்மானின் கள்ளக் கூட்டத்தை யாயின் அந்தப் பயங்கரப் படத்தக்க கள்ளன் மெய்யாகவே யுள்ளவனென்றும் அவனைப் பற்றிய செய்தி கவலையற்றவர்களைச் சந்தோஷப் படுத்தவும் பிள்ளைகளைப் பயமுறுத்தவும கட்டிக்கொள்ளப் பட்ட கதையல்ல வென்றும் நான் உறுதியாய்ச் சொல்லக் கூடியவனாயிருக்கின்றேன்" என்று அலதீன் மொழிந்தனர்.

இவ்வாறு அலதீன் சொன்னவுடன் அப்பெண்ணின் முகத்தில் அச்சந் தோன்றிற்று. "அந்தக் கள்ளர்களோடு நீர் முட்டிக் கொண்டீரோ" என்று மேற்படி பெண் அச்ச முள்ள சத்தத்தில் வினவினள்.

"இன்று காலமே அவர்களை யான் சந்தித்தேன். ஆகிலும் எங்களுக்கிடையி லுண்டான சண்டையின் முடிவு அவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்க வில்லை. அன்றேல் இப்பொழுது அந்த சமாசாரத்தைப் பெருமாட்டியே தங்களுக்குச்சொல்ல நான் இங்கு வரமாட்டேன்" என்று அலதீன் விடை பகர்ந்தனர்.

பின்பு அலதீன் தமக்கும் கள்ளர்களுக்கு மிடையில் நடந்த சண்டையைப் பற்றிய சாரிபங்களை விவரித்துச் சொன்னார். அப்பொழுது மிக்க வழகுள்ள அப்பெண்ணின் முகத்தில் அச்சமும் ஆச்சரியமும் தோன்றின. அலதீன் தப்பிக் கொண்டதற்காகவும் அவருடையவும் அவரின் ஏவற்காரர்களுடையவும் சாமார்த்தியத்துக்காயும் அவ்வுதுமானியருக்குச் சோபனங் கூறினள். மேலும் தன்னுடைய நாமம் மிர்ரா என்றும், தான் திப்லிஸில் வசிப்பவனென்றும், ஆகிலும் ஐசுவரிய முள்ள வர்த்தகராயிருந்த தன் பிதா மரணித்ததால் தான் ஓர் தூரமான பட்டணத்துக்குப் போகவேண்டியதாய் நேரிட்டதென்றும், அந்தப் பணிவிடையை முடித்துவிட்டுத் தான் தனது வூருக்குத் திரும்பிப்போகிறதாகவும் அம்மாது அலதீனுக்குத் தெரிவித்தாள்.

இன்னும் "எனது பிரயாணத்தில் எனக்குத் துணையாய் வருதற்கு வோர் மெய்க்காவலை எனது நேசர்கள் ஆயத்தப்படுத்தி யிருந்தார்கள். ஆகிலும் நான் காலநேரத்தின் அருமையால் ஏய்க்கப்பட்டும் வழியிலுள்ள ஆபத்துகளை மறந்தும் எனது ஏவற்காரப்பெண்களோடு புறப்பட்டுவிட்டேன். காவற்காரர்கள் வந்து என்னை யெட்டிக்கொள்வார்களென்று நம்பி யிருந்தேன். நான் பகல் நேரத்தில் துலக்கமான ஜல

ங்களின் பள்ளத்தாக்கு என்று அழைக்கப் படுகிற விந்தத் தானத்திவிருப்பேனென்று தெரிவித்து விட்டேவந்தேன். அறியப்படாத வேதோவொரு காரணத்தால் அந்தக்காவல் இன்னும் வரவில்லே. இந்த விசுவாச பங்கத்தால் அச்சமுண்டாகி யான் துக்கத்தோடு சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே கனவானே நீரும் உமது ஏவற்காரர்களும் இவ்விடத்திற்கு வந்து சேர்ந்தீர்கள்" என்று மிரா மொழிந்தனள்.

"இப்பொழுது அழகிய மிர்ராவே நீர் அஞ்சவும் கோபங் கொள்ளவும் வேண்டியதில்லே. அந்தக் காவலே யுமக்குத் தருதற்கு நான் தற்செயலாய்க் கூடியவனுகி விட்டேன். காவலில்லாமல் தாங்கள் பிரயாணஞ் செய்வது ஆபத்தான காரியம். நானும் நீங்களறிந்திருக்கிற படி திப்லிசுக்கே போகின்றேன். அங்கு எனக்குக் கொஞ்சம் பிரதான வேலேயிருக்கிறது" என்று அலதீன் சொன்னுர்.

இதற்கதிகமாக அவர் யாதொன்றுஞ் சொல்லவில்லே. தமது நிலேமையையும் சொந்தக் காரியங்களேயும் தாம் திப்லிசுக்குப் போகிற அலுவலேயும் அலதீன் தெரிவிக்க வில்லே. அப்பெண் மரியாதையும் நாகரிகமு முள்ளவள். ஆதலால் அவள் மேற்படி காரியங்களே யறிபத் தேடவுமில்லே. ஆகிலும் அவர் தமது நாமம் அலதீன் என்று அவளுக்குத் தெரிவித்தனர். அவர் இரு ஏவற்காரர்களோடு பிரயாணஞ் செய்வதைக் கொண்டு அவர் அந்தஸ்திலுள்ளவோர் துரைமகனென்பதை அவள் அறிந்து கொண்டாள்.

சிறப்புள்ள மிர்ரா தனது கரங்களேத் தட்டித் தனது ஏவற்காரப் பெண்களே யழைத்தனள். அவர்கள் சில சிறந்த ஆகாரங்களே சர்பத்தோடும் மதுபானத்தோடும் புற்றரையில் வைத்தார்கள். சுற்றியிருந்த மரங்களிலிருந்து பழங்கள் பறித்தெடுக்கப் பட்டன. மிர்ரா ஜோர்ஜிய தேசத்தவளாயும் கிறீஸ்து மதத்தை யனுசரிப்பவளாயும் இருந்ததால் அவள் மதுபானமருந்துவதைத் தடுக்க யாதொன்றும் இருக்கவில்லே. ஆகிலும் அவள் அதைக் குடியாது சர்பத்தைக் குடித்தனள். அலதீனே வோர் முஸ்லிம். ஆதலின் அவர் வெறியாக்கும் குடிப்பைத் தொடவில்லே. இருவரும் சருபத்தைக் குடித்தார்கள். அவர்கள் பொது விஷயங்களேக் குறித்தும் பிரதானமாய் அத்தேசத்தின் தோற்றத்தின் அழகைக் குறித்தும் சம்பாஷித்தார்கள். அப்பொழுது அலதீன் தம்மோடு புதிதாய் அறிமுகமானவளின் இன்பத்தையும் யூகத்தையும் கண்டு அகமகிழ்ந்தனர். மிர்ராவும் அலதீனின் சாதுரியத்தைக் கண்டதிசயித்தனள்.

பின்பு சகலரும் குதிரைகளிலேறிக் கொண்டு பிரயாணமானுர்கள். அலதீன் சிறப்பான மிர்ராவுக் கருகாய் சவாரி செய்தனர். அவரின் இரு ஏவற்காரர்களும் அப்பெண்ணின் ஏவற்காரர்களோடு பிரயாணஞ் செய்தார்கள். ஆகிலும் தாடியுள்ள இபுறுகீம தம்மோடு சென்ற ஹபசிப் பெண்ணேடு யாதொன்றும் பேசாது துக்கமான சிந்தனேயோடு மௌனமாயிருந்தனர். அந்த ஹபசிப் பெண் தம்மோடு பேசத் துணியும போதெல்லாம் இபுறுகீம் தடுத்துக கொண்டனர்; ஹாபீஸோ மற்ற அழகான ஜோர்ஜிய பெண்ணேடு உல்லாசமாய்ச் சம்பாஷித்தனர். அலதீனும் மிர்ராவும் அவர்களின் ஏவற்காரர்களேப் பார்க்கிலும் இருபது யாருக்கு மு

ன்னே சென்றார்கள். அவள் குதிரையில் சவாரி செய்த இலகுவையும் அலங்காரத்தையும சிறப்பையும் கண்டு அலதீன் அதிசயித்தனர். அவள் குதிரைப் பரிக்ஷைவித்தையை நன்றாய்க் கற்றவளாய்த் தோன்றினள். அவளின் குதிரை அமைதியாயிருந்தாலும் மிக்க ஆண்மையுள்ளது. ஆதலின் தைரியமில்லாதவர்கள் அதிலேறத் துணியார்கள். அதன் பிறப்பைக் காட்டக்கூடிய வோர் அடையாளம் அதன் இடுப்பிலிருந்தது. ஆகிலும் அலதீன் தந் தேசத்துக்கு வெளியே யுள்ள இந்தக்காரியங்களை யதிகமாயறியாதவர். ஆதலின் அக்குதிரை யெவ்வித அருமையான சிறப்புள்ள ஜாதியிலுள்ளதென்று அவர் அறியவில்லை.

அவரும் மிர்ராவும் பல விஷயங்களைக் குறித்துப் பேசிக் கொண்டு போனார்கள். அப்பொழுது அவள் மிருதுவாயும் தற்செயலாயும் சில வார்த்தைகளை மொழிந்தனள். அவற்றைக் கொண்டு அவளோடு பாக்கிய முள்ள சுதந்தரவாளியென்றும் அவளே அவளின் ஏசமாட்டி யென்றும் அவள் கவனித்தற்கு அவள் மீது அவளின் இனத்தவர்களின் அதிகாரம் யாதொன்று மில்லை யென்றும் அவள் ஜீவியத்தின் சகல காரியங்களிலும் அவளின் எண்ணப்படி நடக்கலா மென்றும் அலதீன் அறிந்து கொண்டனர். அவள் அறிமுகத்தாலுண்டாகிற நேசததால் உபாயமற்ற தன்மையில் அவ்வாறு பேசுகிறது போலிருந்தாலும் அவள் செய்திகளை மறைக்காது அதிக பழக்க முள்ளவளைப் போல் தம்மோடு பேசுகிறாளென்று அலதீன் எண்ணிய தோடு தமது கண்கள் அவளின் அழகை வியக்கின்றவைகளாயிருந்தாலும் தமது மனம் மயக்காதிருக்கச் செய்து கொண்டனர். ஆகிலும் அவர் அம்மாதுக்கு மிக்க மரியாதையுள்ளவராகவும் நாகரிக முள்ள குதிரைவீரரான தாம் தம்மோடு பிரயாணஞ் செய்கின்ற வோர் அழகிய மாதுக்கு எந்த மட்டுக் கவனஞ் செலுத்த வேண்டுமோ அந்த மட்டுக் கவனஞ் செலுத்துகிறவராகவும் இருந்தனர்.

சாயங்காலத்தின் நிழல்கள் ஒடுங்கி மாலைவெளிச்சம் தோன்றி உஷ்ணமுள்ள பகல் காலத்தின் எழுச்சி அமர்ந்தவுடன் மிர்ராவின் சத்தம் மிருதுவாகிவிட்டதோடு அவளுடைய பாஷையில் உருக்கத்தக்க பேச்சு அதிகப்பட்டது. அந்நேரத்தின் அதிகாரத்தை அவள் உணருகிறவளா யிருந்தனள். ஏதோவொரு வழியாய்—அதை அலதீன் அறியவில்லை—சம்பாஷணை அன்புக்குத் திரும்பிவிட்டது. மிர்ரா சிற்றின்ப பெருமூச்சொன்றை யெறிந்து விட்டுத் தான் காமத்தைக் கனவிலறிந்திருப்பதே யன்றி அநுபோகத்தாலறியவில்லை யென்று கூறினள். மேலும் அம்மாது தான் பாக்கியமுள்ளவளாயும் தானே தன் ஏசமாட்டியாயும் தன்னைத் தனது செல்வத்துக்காய்ச் சுற்றி இருப்பவர்களைத் தவிர வேறு நேசர்களில்லாதவளாயும் இருந்தும் தானின்னும் விவாகஞ் செய்யாதிருப்பது அதிசயமா யிருக்கலாமென்றும், தன்னை மண முடிக்க கேட்பவர்களில்லாமலல்ல வென்றும், தனது இன்பத்தை யொப்படைக்கக் கூடிய வொருவரைத்தான் சந்தித்துக்கொள்ளவில்லை யென்றும், தான் பல அழகான கதைகளை வாசித்திருப்பதாலும் வாய் மொழியாய்ச் சொல்லப் பட்ட கட்டுக் கதைகளைக் கேட்டிருப்பதாலும் தன் மனதுக் கடுத்

த வொருவர் வரும் வரையிற் பார்த்திருப்பதாயும் பகர்ந்தனள்.

சில மனித்தியாலமாக வொருவரை யொருவர் அறிந்துகொண்டவர்களும், தாங்கள் பேசுகிறதைத் தங்கள் ஏவற்காரர்கள் கேட்கக் கூடாத மட்டுத் தூரத்தில் தனிமையாய் பிரயாணஞ் செய்பவர்களும், மிருதுவான மாலை வெளிச்சத்தில மரங்களின் நிழல்களுக் கூடாய்ச் செல்பவர்களுமான ஓர் வாலிப துரைமகனும் ஓர் வாலிபப் பெண்ணும் பேசுதற்கு இது தக்க விஷய மென் றெண்ணி விட்ட அலதீன் "தங்கள் மனதுக்கடுத்தவ ரெவ்வாறுனவர்" என்று கேட்டனர்.

அப்பொழுது மிர்ரா தன் மனத்திலுள்ளவரை விவரித்தாள். அவரையே தான் உவக்கக் கூடுமென்றும் அவரே தனது இருதயத்தையும் தனது கையையும் தனது செல்வத்தையும் பெற்றுக் கொள்வாரென்றும் சொன்னாள். தன் முன்னே யிருப்பவரைக் காணுததவளைப் போலும் தனது சொந்தத் தாதியோடு பேசுகிறவளைப் போலும் பேசினாள். துவக்கத்தில் அலதீன் தஞ் செவிக்குக் கேட்பதை விசுவாசிக்கக் கூடாதவராயிருந்தாலும், அகந்தை யேற்ற அவர் தம் மனத்தில் படிப்படியாயுண்டாகும் சந்தேகத்தையொப்புக் கொள்ளாது, கடைசியாக சிறப்புள்ள மிர்ரா சொல்லும் வர்ணிப்புத் தம்முடையதே யென்பதை நிச்சயமாய் அறிந்து கொண்டனர். அவள் அவரின் சரீரத்தின் அழகையும், அவரின் தத்துவத்தையு, கபட மற்ற தன்மையையும், சாதுரியத்தையும், உதார குணத்தையும், வீரியத்தையும் விவரித்தனள். ஒரு பக்கத்தில் அவள் மேற்படி குறிகளை நுண்ணியமாய் ஆராய்ந் தறிந்து கொண்ட சமர்த்தைக் காட்டினுள். மறு பக்கத்தில் தற்போது சித்திரிக்கப் பட்ட பிரதிமை தம்முடையதே யென்று நம்பிவிட்ட அலதீன் தம்மைத் தாம் இதற்கு முன்னறிந் திருந்ததைப் பார்க்கிலும் அதிகமாய் அறிந்து கொண்டார்.

"இப்படிப் பட்டவரோ என் எண்ணத்துக் கடுத்தவர். ஸீஞோர் அலதீனே இவ்வாறுன வொருவர் இவ்வுலகத்தி லிருக்கின்றுரென்று எண்ணுகிறீரா. அப்படி இருப்பின் அவரின் இருதயத்தை நான் வசியப் படுத்திக் கொள்வேனென்று நான் நம்பலாமா?" என்று மிர்ரா கேட்டனள்.

"மிர்ரா பெருமாட்டியின் சௌந்தரியமும் சாதுரியமும் அவர் எந்த இருதயத்தைக் கவர்ந்து கொள்ள நாடுகிருரோ அதை வசியப் படுத்திக் கொள்ளும்" என்று தமது நிலைபாரத்தின் அந்தக் கேட்டை யுணர்ந்து கொண்ட அலதீன் விடைபகர்ந்தனர்.

மிர்ரா தம்மைப் பார்த்ததையும் அவளுடைய முகத்தில் சந்தோஷ குறி யுண்டாயிருந்ததையும் அலதீன் கண்டு கொள்ளுதற்குப் போதிய வெளிச்சம் மாத்திரம் அந்த மாலை நேரத்திலுண்டாயிருந்தது. சில நிமிஷங்களின் பின்பு தாழ்ந்த சத்தமாய் "இவ்வித வோர் பிரியமான கனவுக்கு நானிடங் கொடுக்கலாமோ. என் மனதுக் கடுத்தவரை யான் கண்டு கொண்ட பொழுது அவர் எனது எண்ணத்துக் கிசைவாரா"? என்று அவள் கேட்டனள்.

"பெருமாட்டியே, உங்கள் எண்ணத்திலுள்ளவர் பூரண இலட்சணத்தை யுடையவர், அவ்விதமான வொருவரை இலகுவிற் கண்டு கொள்ளக் கூடாது" என்

று அலதீன் உல்லாசத்தோடு சிரித்துக் கொண்டு கூறினர்.

அப்பொழுது மிர்ரா தனது குதிரையை அலதீனுடைய குதிரைக்குச் சமீபத்திற் கொண்டு வந்து தாழ்ந்த சத்தத்தில் "அப்படிப்பட்டவர் காணப்படார்" என்று காதுக்குட் சொன்னாள்.

மெய்யா என்று அலதீன் மொழிந்து விட்டு "அதோ வெளிச்சங்கள் தெரிகின்றன. நாங்கள் இரவில் தங்கக் கூடுமென்று தாங்கள் சொன்ன கோபுரம் இதோ விருக்கிறது. நாங்கள் குதிரைகளைக் கதியாய் நடத்துவோம். நாங்கள் வழியில் அதிகம் தாமதப்பட்டோ மென்று எண்ணுகின்றேன்" என்று கூறினார்.

அப்பொழுது மிர்ரா அலதீனையுற்றுப் பார்த்து அவரில் எந்த மட்டுக் காரிய சித்தியைத் தனது சம்பாஷணை யுண்டாக்கியிருக்கிறதென்றும் தன்னை அவர் அபகூஷத்தோடு பாவிக்கிறாரா அல்லது தான் சொல்லியதை யவர் ஒப்புக் கொள்ளப் போதிய அளவு தான் விளக்கமாய்ப் பேசவில்லையென்று எண்ணுகிறாரா வென்றும் அறிந்து கொள்ளத் தேடினாள். அவள் பார்த்ததை அலதீன் காணவில்லை. அவர் தமது சொல்லுக்குச் செயலை யிணக்குதற்காய்த் தமது குதிரையை முன்னே செலுத்தினர். அப்பொழுது மிர்ரா "நான் சொன்ன கோபுரம் இது வல்ல. நாங்கள் இன்னுமொரு மணித்தியாலம் போக வேண்டும். அந்த வெளிச்சம் ஓர் சிறு கிராமத்தில் எரிகின்றது. நான் இந்த வழியாய்ப் பிரயாணஞ் செய்திருக்கின்றேன். இதிலொவ்வொரு விர லிடையையும் நானறிவேன்,,— என்று சென்னாள்.

"நாங்கள் சில நிமிஷங்களுக்காவது இந்தச் சிறு கிராமத்தில் தங்க வேண்டும். எங்கள் குதிரைகளுக்கு ஓய்வும் உணவும் கொடுக்க வேண்டும். அவைகள் உணவில்லாமல் இன்னும் ஒரு மணித்தியாலம் சவாரி செய்யக் கூடா. அவை இன்று பகல் பிரயாசமான வேலைகள் செய்திருக்கின்றன" வென்று அலதீன் பகர்ந்தனர்.

"ஸீமேஞர் அலதீனே நீர் எண்ணுகிற படியே யாகட்டும். நீரே காவலராயிருக்கின்றீர். உமது கட்டளைப் படியே நாங்கள் நடக்க வேண்டும்" என்று மிர்ரா சிரித்துக் கொண்டு மறுமொழி சொன்னாள்.

(இன்னும் வரும்)

## ஓர் சம்பாஷணை

வாலிபன்—அஸ்ஸலாமு அலைக்கும்.

வயோதிபர்—வ அலைக்கு முஸ்ஸலாம், வா மகனே, இரு, உன் சுக மெப்படி.

வாலி.—என் பிதாவே சுகம் நல்லது. சென்ற முறை நான் தங்களோடு பேசும பொழுது தீனையறிகிறதாவது ஈமான் இஸ்லாம் இஹ்ஸான் ஆகியவற்றை யறிகிறதே யென்று சொன்னீர்களல்லவா. ஈமானுவதென்ன?

வயோ—றசூல் சல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்கள் போதித்ததை விசுவசிப்பதே. அவ்விசுவாசம் ஐந்து தன்மைகளில் இருக்கின்றது.

வாலி.—அத்தன்மைகளை விபரிப்பீர்களாக.

வயோ.—ஈமான் மலக்குகளாகிய தேவ தூதர்களில் இயல்பானதாகவும், அன்பியாக்களான தீர்க்க தரிசிகளில் காக்கப்பட்டதாகவும், ஸாலிஹீன்களென்ற நல்லொழுக்க முள்ள முஸ்லிமகளில்

அல்லாகுத் தஆலாவால ஏற்றுக் கொள்ளப் பட்டதாகவும், வழிகெட்டவர்களில் நிலையற்றதாகவும், முறைபிலீன்களென்ற வஞ்சகர்களில் பறித்துக் கொள்ளப் பட்டதாகவும் இருக்கும. மேலும் ஈமான் தகுலீதிய்யா இதிதியாரிய்யா வென இரு பிரிவாகும்.

வாலி.—அப்பிரிவுகளின் வித்தியாசமென்ன?

வயோ.—அல்லாகுத் தஆலாவை அத்தாட்சிகளைக் கொண்டாராய்ந்தறியாமல தாய் தந்தை குருமார் முதலியவர்களின் சொல்லையொப்புக் கொண்டு விசுவாசிப்பதே தகுலீதுடைய ஈமான். அல்லாகுத் தஆலாவைப் பற்றி யோசித்து அத்தாட்சிகளைக் கொண்டாராய்ந்து நம்புவதே இகுதியாருடைய ஈமான். மேலும ஈமானுக்கு ஆறு றுகுன்களுண்டு.

வாலி—அந்த றுகுன்கள் எவை.

வயோ— அல்லாவைக் கொண்டும் (ஆமந்துபில்லாகி), அவனின் மலக்குகளைக் கொண்டும (வமலாயிகதிகி), அவனின் வேதங்களைக் கொண்டும (வகுதுபிகி), அவனின் றசூல்மார்களைக் கொண்டும் (வறுஸிலிகி), கடைசிநாளைக் கொண்டும (வல்யவுமில் ஆகிறு,) கற்பனையைக் கொண்டும் அதில் நலவானதும தீங்கானதும் அல்லாகுத் தஆலாவில் நின்றுமே (வல் கதுரிகைரிகி வஷர்ரிகி மினல்லாகித் தஆலா) என்றும் ஈமான் கொள்வதாம. இவைகளே ஈமானின் றுகுன்கள் ஆனால் ஈமான் தீனின் நான்கு றுகுன்களிலொன்று றுக்குனென்றதற் கர்த்தம் தூண்.

வாலி.—பின்னை தீனின் (மார்க்கத்தின்) மற்றய மூன்று றுகுன்களுமெவை?

வயோ.—இஸ்லாம், தௌஹீது, மஃரிபா ஆகியவைகளே:

வாலி.—ஈமான், இஸ்லாம், தௌஹீது, மஃரிபா ஆகியவைகளே மார்க்கத்தின் தூண்களாயின் இஹ்ஸான் எதைச்சேர்ந்தது.

வயோ.—தௌஹீதும் மஃரிபாவும இஹ்ஸானைச் சேர்ந்தவை. இதனை யான் உனக்குப் பின்னால் தெரிவிப்பேன்.

வாலி.—அல்லாகுத் தஆலாவைக் கொண்டீமான் கொள்வதெவ்விதம.

வயோ.—அல்லாகுத் தஆலா வொருவனென்றும், தன்னுடைய தாத்து சிபாத்து அஸ்மா அபுஆல் ஆகியவைகளில் இணை துணையற்றவனென்றும், உண்மையும் பூர்வமும் அழியாமையும் ஒப்பின்மையும் தன்னிற் றானிருத்தலும் ஒருமையும் றூகின்றி ஹயாத்தும் புத்தியின்றி அறிவும் இதயமின்றி நாட்டமும் அவயவமின்றித் தத்துவமும் செவியின்றிக் கேள்வியும் கண்ணின்றிப் பார்வையும் நாவின்றிப் பேச்சுமுள்ளவனென்றும், இல்லாமை அபூர்வம் அழிவு உவமையாதேனுமொன்றிருத்தல் புன்மை மரணம் மூடம் நாடாமை ஏலாமை செவிடு குருடு ஊமை முதலியவைகளற்றவனென்றும், மாதா பிதா மனைவி மக்கள் ஊண் குடிப்பு உறக்கம் மறதி சந்தோஷம் துக்கம நசல் சுகம் வருணம் குணம் நீளம அகலம் ஆண்பெண் அலி என்னும மட்டுத் திட்டங்களிலடங்காதவனென்றும், காலம திசைகோணம் ஐயறிவு சந்தேகம் ஊசாட்டம் ஆகியவைகளிலேதாவதவனைவெருதிக் கொள்ளாதவன் என்றும், அவனின் செயலுக்குக் காலம் கருவி தாமதம் தடை யிடை பிரையாசை சடை ஆகியவைகளற்றவன் என்றும், அவன் ஆக்காமல் ஆவ

தும வளர்க்காமல் வளர்வதும் அழிக்காமல் அழிவதும் இல்லையென்றும், அவனே வணங்கப்படுவதற் குரிமையானவனென்றும் உண்மையாய் அறிந்து ஈமான் (விசுவாசம்) கொள்வதே.

வாலி.—மலக்குகள் எப்படிப்பட்டவர்கள்.

வயோ—மலக்குகள் ஒளியினால் படைக்கப்பட்டு இனத்தி லுயர்ந்து குணத்திற் சிறந்து ஊணுறக்கம் ஆண் பெண் மாதா பிதா மனைவி மக்களாதியவைக ளற்று குபிர் பொய் அவிசுவாசம், துரோகம், பெரும்பாவம், சிறுப்பாவம் முதலிய எவ்வித குற்றங்களையும் விட்டு நீங்கி மாறாத பூரண அறிவைப் பெற்று தஸ்பீகு து தக்[illegible]தஹ்மீது தஃலீலா தியவைகளை ஊண்குடிப்பாக்கி அல்லாகுத் தஆலாவின் ஏவலுக்கொருக்காலும் மாறுபடாத மஃசூம்களென்னும் நாமம் பெற்ற பரிசுத்தவான்கள்.

வாலி.—அல்லாகுத் தஆலாவின் வேதங்களெவை?

வயோ.—அல்லாகுத் தஆலவின் திருவசனமாகிய நான்கு வேதங்களில் தவுறாது வேதம் அபுறானிப் பாஷையில் [illegible]பி மூஸா அலைகிஸ்ஸலாமுக்கும், சபூர்வேதம் யூனானிப்பாஷையில் நபிதாவூது அலைகிஸ்ஸலாமுக்கும், இன்ஜீல் வேதம் சுரியாணிப்பாஷையில் நபி ஈஸா அலைகிஸ்ஸலாமுக்கும். புறுக்கான் வேதம் அறபுப்பாஷையில் நபி நாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுக்கும் இறக்கப்பட்டன. நூற்றுப்பத்து சுகுபுகளில் 10 ஆதம் அலைகிஸ்ஸலாமுக்கும், 50 சீது அலைகிஸ்ஸலாமுக்கும், 30 இதுரீஸ் அலைகிஸ்ஸலாமுக்கும, 10 இபுறாகீம் அலைகிஸ்ஸலாமுக்கும், 10 தவுறாது வேதத்துக்கு முன் மூஸா அலைகிஸ்ஸலாமுக்கும் இறக்கப்பட்டன. அவை அட்சாரமும் தொனியுமின்றி வசனிக்கப்பட்டவை. படைக்கபபட்டவையல்ல. தற்போது புறுகான் வேதப் பிரமாணங்களைத்தவிர மற்ற வேதங்களினதும் சுகுபுகளினதும் பிரமாணங்கள் மாற்றப் பட்டன. புறுகானின் பிரமாணங்கள் கியாமம் வரையில் மாற்றப் படமாட்டா.

வாலி.—றசூல்மார்கள் யாவர்?

வயோ.—அல்லாகுத் தஆலாவின் திருத்தூதர்களாகிய றசூல் மார்களும நபிமார்களும மனிதர்களே. அவர்களோ நுபுவ்வத்துக்கு முன்னும் பின்னும பெரும்பாவம சிறுபாவம் ஆகிய வெக்குற்றத்தையும் விட்டு நீங்கிய பரிசுத்தவான்கள். அவர்கள் ஆண் பிள்ளைகள். நாட்டான் மக்கள். மேனிகளில் யாதேனும் குறைவு படாதவர்கள். உண்மை விசுவாசம் நம்பிக்கையாகியவைகளில் பூரணமானவர்கள். அல்லாகுத்த ஆலாவின் கட்டளைகளைக் கொஞ்சமும் மறைக்காது எத்து வித்தும்புத்திவணக்கம் ஆகியவற்றிற் குறைவற்றும் எல்லாரும் இஸ்லா மார்க்கத்தையே கைக் கொண்டும் முஃஜிஸாத்துப் பெற்றும். எப்பொழுதும் மாறாததும் மாற்றுப் படாததுமான நபிப்பட்டத்தை யுடையவர்களாயும் இருந்தவர்கள், எல்லா நபிமார்களிலும் றசூல் மார்களிலும் உலுல் அஸ்மிகளிலும் காண வேதங் கொடுக்கப் பட்ட நால்வரும் வரிசையானவர்கள். அந் நால்வரிலும் நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் வரிசையானவாகள். அவர்களுக்குப் பின் கியாம நாள் வரைக்கும் நபியில்லை.

வாலி.—பிதாவே. கடைசி நாளைப் பற்றியும், கற்பனையைப் ப

பற்றியும் அடுத்த முறை வினவுவேன். இப்பொழுது பூமியைப் பற்றிச் சில கேள்விகளைக் கேட்க நாடுகின்றேன். பூமி அளக்கப்பட்டிருக்கிறதா?

வயோ.— வான சாஸ்திரிகள் பூமியை யளந்து அது சரிவர உண்டையானதல்ல ஆகிலும் கோளவமானதென்று சொல்லி இருக்கின்றார்கள். அதன் எதிரேயுள்ள இருபக்கங்களும் கொஞ்சந் தட்டையானவை யாதலின் பூமி வடிவில் தோடைப் பழத்தைப் போலிருக்கின்றது. தட்டையான பக்கங்கள் துருவங்களென்று அழைக்கப்படுகின்றன. அவற்றி லொன்று வடதுருவம். மற்றது தென்துருவம். அவற்றுக் கிடையிலுள்ள தூரம 7899 மைலுக்குக் கொஞ்சமதிகம். பூமி தடித்திருக்கிற பகுதியில் ஒருபக்கத்திலிருந்து மறுபக்கம் வரையிலுள்ள தூரம 7925 மைலுக்குக் கொஞ்சமதிகம். ஆதலின் பூமியின் குறுக்களவு விரக்ஷத்திற் பார்க்கிலும் துருவங்களுக் கிடையில் கிட்டத் தட்ட $26\frac{1}{2}$ மைல் குறைவாயிருக்கிறது. இந்தத் தூரங்களை நீ விளங்கிக் கொள்வது வருத்தமாயிருக்கலாம். ஒருமைல் அல்லது இரண்டு மைல தூரமுள்ள இரு தானங்களுக்கிடையில நீ நடந்து விட்டு அந்தத் தூரத்தைப் பூகோளத்தின் குறுக்களவுக்கு வருதற்கு எத்தினை ஆயிரந் தரம் பெருக்கவேண்டுமென்று நீ யோசிப்பது வுனக்குப பிரயோசனமாயிருக்கும்.

வாலி.— பூமியில் உஷ்ணமும் வெளிச்சமும எவ்வா றுண்டாகின்றன?

வயோ.— நாங்கள் எங்களாயுசு முழுவதிலும் ஒவ்வொரு நாளும சூரியன் ஆகாயத்தில் பிரயாணஞ் செய்வதைக் கண்டிருக்கின்றோம். ஒவ்வொரு இரவும் ஆகாயத்தில் மேகமில்லாதிருக்கையில் சந்திரன் அல்லது நக்ஷத்திரங்கள் சிரசுக்கு மேலாகச் செல்லுவதைக் காண்கின்றோம். நாளை சூரியன் திரும்பவும உதயமாகுமென்றும் முன்போலவே அசைந்துகொண்டிருக்குமென்றும் நாங்கள் நிச்சயித்திருக்கின்றோம. பூமியைச் சுற்றி அமைதியான, ஒழுங்கான ஓய்வற்ற சலனம் உண்டாகிக் கொண்டே யிருக்கிறதாய்த் தோன்றுகிறது. சூரியன் பிரகாசிக்கும்பொழுது உஷ்ணமுண்டாயிருக்கிறது. மேகம வானத்தை மறைத்தவுடன் காற்று குளிர்ச்சியுள்ளதாகி விடுகின்றது. இரவில் நாங்கள் குளிரை யுணர்கின்றோம. திரும்பவும் பகலானவுடன் வானத்தில் வெளிச்ச முண்டாகின்றது. ஆகிலும் சூரியன் மேற்கில் இறங்கியவுடன் இருட்டுண்டாகிறது. இவ்வாறு சூரியனிலிருந்தே நாங்கள் வெளிச்சத்தையும உஷ்ணத்தையும் பெற்றுக்கொள்ளுகிறோம். ஆகிலும் பூமிக்கும சூரியனுக்கு முள்ள சம்பந்தங்களை யறியமுன் பூமியில் சம்பவிக்கிறதைச் சரியாய் அறியக்கூடாது.

வாலி.—பூமி, சூரியன், சந்திரன் நக்ஷத்திரம் ஆகியவைகளின் நிலைமைகளையும் அவைகளுக் கிடையிலுள்ள சம்பந்தங்களையும் குறித்துப் பழைய மனிதர்களுக்குண்டா யிருந்த நம்பிக்கை யென்ன?

வயோ.—நாங்கள் சிறு பிராயத்தில் நம்பியிருந்தது போலவே பழைய மனிதர்களும் நம்பியிருந்தார்கள். பூமி உலகக் கட்டின் மத்தியிலிருக்கிற தென்றும் அதைச் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் ஆகியவைகள் சுற்றுகின்றன வென்றும் அவர்கள் விசு

வாலி.—அந்தப் பழைய நம்பி வசித்தார்கள்.

க்கையின் அடையாளங்கள் இன்னும் இருக்கின்றனவா? •

வயோ.—மேற்படி வானபொருட்கள் பூமியைச்சுற்றிப் பிரயாணஞ்செய்வது போல் அவை யுதயமாகின்றன அஸ்தமிக்கின்றனவென்று நாங்கள் இன்றுவரையிற் பேசுகிறதில் அவ்வடையாளங்களுண்டாயிருக்கின்றன.

வாலி.—பூமிக்கும் சூரியனுக்குமுள்ள மெய்யான சம்பந்தமென்ன?

வயோ.—பூமி உலக கட்டின் மத்தியிலில்லை யென்றும், அது சூரியனைச்சுற்றி ஓய்வின்றிப் பிரயாணஞ் செய்கின்ற ஒரு தொகையான வானபொருட்களுள் ஒன்றென்றும், சூரியனே பெரும மத்திய உஷ்ண பிண்டமாயிருந்து மற்றும் வான பொருட்களுக்கு வுஷ்ணத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்கின்றதென்றும் அநேக நாமுண்டிகளாக விசுவசிக்கப் படுகின்றது. இதனுண்மையை நாங்கள் இரவும் பகலும் உண்டாகிற விதத்தை ஆலோசிக்கும் பொழுது அறிந்துகொள்வோம்.